بسم الله الرحمن الرحيم　　نحمده ونصلّی علی رسوله الكريم　　وعلی عبده المسيح الموعود

وَلَقَدْ نَصَرَكُمُ اللّٰهُ بِبَدْرٍ وَّأَنْتُمْ أَذِلَّةٌ

தொகுதி 3

வருடாந்திர சந்தா ரூபாய் 500/-

# பதர்

வார இதழ் - காதியான்

The Weekly BADAR Qadian TAMIL

இதழ் 40

ஆசிரியர் முஸ்ஸம்மில் அஹ்மது

துணை ஆசிரியர் அ.கலீல் அஹ்மது

23 முஹர்ரம் 1440 ஹிஜ்ரி கமரி 04 அஹா 1397 ஹிஜ்ரி ஷம்ஸி

04 அக்டோபர் 2018


## அல்லாஹ்வின் கட்டளை

يُؤْتِي الْحِكْمَةَ مَنْ يَّشَآءُ

وَمَنْ يُّؤْتَ الْحِكْمَةَ

فَقَدْ أُوْتِيَ خَيْرًا كَثِيْرًا ؕ

وَمَا يَذَّكَّرُ إِلَّآ أُولُوا الْأَلْبَابِ ۝

தான் விரும்புவோருக்கு அவன் ஞானத்தை வழங்குகின்றான். ஞானம் வழங்கப்பட்டோருக்கு, நிச்சயமாக மிக அதிக அளவில் நன்மை கிடைத்து விட்டது. அறிவுடையோரைத் தவிர வேறு எவரும் போதனை பெறுவதில்லை. (2:270)

## அஹ்மதிய்யா செய்திகள்

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்ய–தஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் அல்லாஹ்வின் அருளால் நலமுடன் இருந்து வருகின்றார்கள். அல்ஹம்துலில்லாஹ். ஜமாஅத் சகோதரர்கள் ஹுஸூர் அவர்களின் சிறந்த உடல் நலத்திற்காகவும், அவர்களின் நீண்ட ஆயுளுக்காகவும், அவர்களது உயர்வான நோக்கங்களில் வெற்றி கிடைப்பதற்காகவும், அவர்களது சிறப்பான பாதுகாப்பிற்காகவும், தொடர்ந்து துஆ செய்து வாருங்கள். அல்லாஹ் ஒவ்வொரு நொடியும் ஹுஸூர் அவர்களது பாதுகாவலனாகவும் உதவி–யாளனாகவும் இருப்பானாக. மேலும் அவர்களுக்கு உதவி செய்வானாக! ஆமீன்.

**ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் கூறுகின்றார்கள்: நூஹ் நபியின் கப்பல் என்ற நூலில் நமது போதனைகள் அடங்கிய பகுதி எங்கு உள்ளதோ அவற்றை கண்டிப்பாக ஒவ்வோர் அஹ்மதியும் படிக்க வேண்டும். இன்னும் கூறுவதென்றால், முழு நூலையும் படிக்க வேண்டும்**

**இறைவெளிப்பாட்டின் வசனங்களில் மர்யம் என்றும் ஈஸா என்றும் வந்திருப்பதன் கருத்து நானாகவே இருக்கிறேன். நாம் அவரை ஓர் அடையாளமாக ஆக்குவோம் என்று என்னைப் பற்றியே கூறப்பட்டிருக்கிறது. மேலும் இவர் வர இருந்த அதே ஈஸப்னு மர்யமாக இருக்கிறார். இவர் மீது மக்கள் சந்தேகம் கொள்கிறார்கள். வர வேண்டியவர் இவராகவே இருக்கிறார். இதுவே உண்மையாகும் என்றும் கூறப்பட்டுள்ளது. புரியாததனாலே சந்தேகம் ஏற்பட்டுள்ளது. எவர்கள் இறைவனது இரகசியங்களைப் புரிவதில்லையோ அவர்கள் வெளித் தோற்றத்தைப் பார்க்கிறார்கள். அவர்களது பார்வை உண்மையின் பக்கம் செல்வதே இல்லை**

**வாக்களிக்கப்பட்ட மஸீஹும் மஹ்தியுமான ஹஸ்ரத் அக்தஸ் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி (அலை) அவர்கள் எழுதிய கிஷ்தி நூஹ் (நூஹ் நபியின் கப்பல்) என்ற நூலிலிருந்து...**

அன்பிற்குரியவர்களே! சிந்தியுங்கள். இறைவனுக்கு அஞ்சுங்கள். ஒருபோதும் இது மனிதனின் செயல் அல்ல. இந்த நுட்பமான, நுணுக்கமான ஞானங்கள் மனிதனது யூகத்துக்கும், எண்ணத்திற்கும் அப்பாற்பட்டவையாகும். பராஹீனே அஹ்மதிய்யாவை இயற்றி சில காலம் கடந்து விட்டது. அச்சமயத்தில் எனக்கு இத்திட்டம் பற்றிய எண்ணம் இருந்திருக்குமேயானால் இப்னு மர்யமாகிய ஈஸா மஸீஹ் வானத்திலிருந்து மீண்டும் வருவார் என்று இதே பராஹீனே அஹ்மதிய்யாவில் நான் ஏன் எழுதியிருக்க வேண்டும்?

ஆகவே இந்த நுட்பமான கருததை அறிந்திருப்பின் இந்த ஆதாரம் பலவீனம் அடையும் என இறைவன் அறிந்திருந்தான். இதனால் அவன் பராஹீனே அஹ்மதிய்யாவின் மூன்றாவது பாகத்தில் எனது பெயரை மர்யம் என்று வைத்த போதிலும் இரு ஆண்டுகள் வரை நான் மர்யமின் பண்பால் வளர்ந்து வந்தேன். மேலும் மறைவாகவே வளர்ச்சி அடைந்து வந்தேன் என்பது பராஹீனே அஹ்மதிய்யாவிலிருந்து நிரூபணமாகிறது.

பின்னர் இதன் மீது இரண்டு ஆண்டுகள் கடந்ததும் பராஹீனே அஹ்மதிய்யாவின் நான்காவது பாகம் 496 ஆம் பக்கத்தில் குறிப்பிடப்பட்டிருப்பது போன்று மர்யமைப் போல் ஈஸாவின் ஆவி என் மீது ஊதப்பட்டது. மேலும் உவமையான நிலையில் நான் கர்ப்பவதியாக்கப்பட்டேன். இறுதியில் பல மாதங்களுக்குப் பின்னர் – அது பத்து மாதங்களுக்கு அதிகமானதல்ல. பராஹீனே அஹ்மதிய்யாவின் நான்காவது பாகம் பக்கம் 556 ல் இடம் பெற்றிருக்கும் இறைவெளிப்பாடு மூலமாக நான் மர்யமிலிருந்து ஈஸாவாக்கப்பட்டேன். ஆகவே நான் இவ்வாறு ஈஸப்னு மர்யமாக இருக்கிறேன்.

பராஹீனே அஹ்மதிய்யாவை இயற்றிக் கொண்டிருக்கும் சமயத்தில் இந்த மறைவான இரகசியங்கள் குறித்து இறைவன் எனக்கு அறிவிக்கவில்லை. ஆயினும் இந்த இரகசியங்களைக் கொண்ட எல்லா இறைவெளிப்பாடுகளும் என் மீது இறக்கப்பட்டு அவை பராஹீனே அஹ்மதிய்யாவில் பதிவு செய்யப்பட்டுள்ளன. ஆனால் அவற்றின் பொருள்கள், வரிசை முறைகள் ஆகியவற்றைக் குறித்து எனக்கு அறிவிக்கப்படவில்லை.

இதனாலேயே முஸ்லிம்களில் வழிவழியாக நம்பப்பட்டு வரும் நம்பிக்கையை பராஹீனே அஹ்மதிய்யாவில் நான் எழுதியிருந்தேன். அது எனது தன்னடக்கம் மற்றும் பகட்டில்லாத பண்பிற்குச் சாட்சியாக இருக்கிறது. நான் அவ்வாறு எழுதியது இறைவெளிப்பாட்டின் அடிப்படையில் அல்ல. முஸ்லிம்களின் வழக்கமான நம்பிக்கையை எழுதியிருந்தேன். ஆகவே அது எதிரிகளுக்கு ஓர் ஆதாரமாக இருக்க முடியாது.

ஏனெனில் இறைவன் தானாகவே ஒன்றை எனக்கு புரிய வைக்காதவரை மறைவான விஷயங்களை நான் அறிவேன் என்பது என் வாதம் அல்ல. இறைவனால் எனக்கு விளக்கப்படாத சமயம் வரை பராஹீனே அஹ்மதிய்யாவில் இடம் பெற்றுள்ள சில வெளிப்பாடுகளின் இரகசியங்களை என்னால் புரிந்து கொள்ள முடியாமல் இருக்க வேண்டும் என்பதை இறைஞானம் நாடியது. ஆனால் எப்போது ஏற்ற சமயம் வந்தடைந்ததோ அப்போது அந்த இரகசியங்கள் எனக்குப் புரிய வைக்கப்பட்டன.

இதன் பின்பே நான் வாக்களிக்கப்பட்ட மஸீஹாக இருக்கிறேன் என்றும் எனது வாதத்தில் புதிய விஷயம் ஒன்றுமில்லை என்றும்

*(தொடர்ச்சி கடைசிப் பக்கம்...)*

பிரிண்டர் மற்றும் பப்ளிஷரான ஜமீல் அஹ்மது நாஸிர் அவர்கள் காதியானிலுள்ள ஃபஸ்லே உமர் அச்சகத்தில் அச்சிட்டு காதியானிலுள்ள பதர் பத்திரிகை அலுவலகம் மூலம் இதனை வெளியிட்டுள்ளார்.
Proprietor Nigran Badar Board Qadian

# ஜுமுஆ பேருரை

**அஹ்மதிய்யா ஜமாஅத்தின் ஜெர்மனி ஆண்டு மாநாடு ஆரம்பமாகிறது. அல்லாஹ் நமக்கு இன்னொரு மாநாட்டில் கலந்து கொள்ளும் வாய்ப்பினை வழங்கியுள்ளான்**

**ஆண்டு மாநாட்டின் நோக்கத்தை எடுத்துக் கூறியவாறு ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்கள் இதனைக் கூறுகின்றார்கள்: இந்த மாநாடு ஓர் உலகியல் திருவிழா அல்ல. அல்லது நாம் ஒன்று கூடுவது உலகியல் நோக்கங்களுக்காகவோ எண்ணிக்கையைக் காட்டுவதற்காகவோ அல்ல. மாறாக, இங்கு வருபவர்கள் மற்றும் கூடுபவர்கள் மாசற்ற முறையில் இறைவனுக்காக ஒன்று கூட வேண்டும். அதன் மூலம் அறிவு ரீதியான, ஆன்மீக ரீதியான தாகத்தைத் தணித்துக் கொள்ள வேண்டும். மேலும் ஆன்மீகத்தை அதிகப்படுத்திக் கொள்ள வேண்டும். அதே வேளையில் அல்லாஹ்வின் அடியார்களின் உரிமைகளைப் பற்றியும் தெரிந்து கொள்ள வேண்டும். அந்த உரிமைகளை வழங்க முயற்சி செய்ய வேண்டும்**

**ஆண்டு மாநாட்டில் பணியாற்றக் கூடியவர்களுக்கும், அதே போன்று மாநாட்டில் பங்கு பெறக்கூடிய விருந்தாளிகளுக்கும் திருக்குர்ஆன், ஹதீஸ் மற்றும் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றுக்களின் அடிப்படையில் முக்கிய அறிவுரைகள்**

**பணி செய்யக்கூடிய மற்றும் மாநாட்டில் கலந்து கொள்கின்ற ஒவ்வோர் அஹ்மதியும் இஸ்லாத்தின் அழகிய போதனையின்படி நடந்தவாறு தப்லீக்கிற்கான வழியாக அமைகின்றார். சிறந்த போதனையைக் காட்டக்கூடியவராக இருக்கின்றார். இந்த வகையில் மாநாட்டில் கலந்து கொள்பவர்களும், டியூட்டி கொடுப்பவர்களும் அமைதியான முறையில் தப்லீக் செய்யக் கூடியவர்களாக இருக்கின்றனர்**

**மாநாட்டில் கலந்து கொள்வதனால் நீங்கள் விருந்தாளியாக ஆகிவிட மாட்டீர்கள். நீங்கள் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் போதனைகளின்படி செயல்படவில்லையென்றால், அன்னாரது கூற்றுக்களின்படி அமல் செய்யவில்லை என்றால், மாநாட்டின் நோக்கத்தை முழுமை செய்யவில்லை என்றால், நீங்கள் ஆயிரம் முறை நாங்கள் மாநாட்டிற்கு வருகை தந்துள்ளோம். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களது விருந்தாளிகள் ஆவோம் என்று கூறினாலும் நீங்கள் விருந்தாளிகள் கிடையாது. ஏனென்றால், உங்களது செயல்கள் அன்னாரது போதனையின்படி இல்லை என்பதை நிரூபிக்கக் கூடியதாக இருக்கின்றது**

செய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **ஜெர்மனி ஆண்டு மாநாட்டின் சந்தர்ப்பத்தில் DM Arena karlsruhe ல் 07 செப்டம்பர் 2018** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1397 -ஆம் ஆண்டு **தபூக்** மாதம் **07 ஆம் தேதி** ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

குறிப்பு: 31 ஆகஸ்ட் 2018 அன்று ஹுஸூர் அவர்கள் ஆற்றிய ஜுமுஆ பேருரை கிடைக்கப்பெற்ற பிறகு வெளியிடப்படும் – இன்ஷா அல்லாஹ். (பத்ர் துறை)

أَشْهَدُ أَنْ لَا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهُ لَا شَرِيكَ لَهُ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُولُهُ

أَمَّا بَعْدُ فَأَعُوذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيمِ

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيمِ-

اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِينَ- الرَّحْمٰنِ الرَّحِيمِ- مٰلِكِ يَوْمِ الدِّينِ- إِيَّاكَ نَعْبُدُ وَإِيَّاكَ نَسْتَعِينُ-

اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيمَ- صِرَاطَ الَّذِينَ أَنْعَمْتَ عَلَيْهِمْ

غَيْرِ الْمَغْضُوبِ عَلَيْهِمْ وَلَا الضَّالِّينَ

அஹ்மதிய்யா ஜமாஅத்தின் ஜெர்மனி ஆண்டு மாநாடு ஆரம்பமாகிறது. அல்லாஹ் நமக்கு இன்னொரு மாநாட்டில் கலந்து கொள்ளும் வாய்ப்பினை வழங்கியுள்ளான். ஆண்டு மாநாடு என்றால் என்ன? நாம் வருடக்கணக்கில் இதனைக் கேட்டு வருகின்றோம். இன்னும் சொல்வதாயின், ஆண்டு மாநாடு தொடங்கப்பட்டதிலிருந்து 125 வருடங்கள் முன்பிருந்தே கேட்டு வருகிறோம். ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்கள் இதனை விளக்கியவாறு கூறுகின்றார்கள்: இந்த மாநாடு ஓர் உலகியல் திருவிழா அல்ல. அல்லது நாம் ஒன்று கூடுவது உலகியல் நோக்கங்களுக்காகவோ எண்ணிக்கையைக் காட்டுவதற்காகவோ அல்ல.

(ஷஹாதத்துல் குர்ஆன், ரூஹானி கஸாயின் தொகுதி 6 பக்கம் 395)

மாறாக, இங்கு வருபவர்கள் மற்றும் கூடுபவர்கள் மாசற்ற முறையில் இறைவனுக்காக ஒன்று கூட வேண்டும். அதன் மூலம் அறிவு ரீதியான, ஆன்மீக ரீதியான தாகத்தைத் தணித்துக் கொள்ள வேண்டும். மேலும் ஆன்மீகத்தை அதிகப்படுத்திக் கொள்ள வேண்டும். அதே வேளையில் அல்லாஹ்வின் அடியார்களின் உரிமைகளைப் பற்றியும் தெரிந்து கொள்ள வேண்டும். அந்த உரிமைகளை வழங்க முயற்சி செய்ய வேண்டும்.

ஆனால் நான் இதனைக் கூறுவதில் வேதனை அடைகிறேன். சிலர் இங்கு மாநாட்டில் கலந்து கொள்வதற்காக வந்துள்ளனர். ஆனால், தமது சில நண்பர்களைச் சந்தித்து அவர்களது பணிகள் சார்பான பேச்சுக்களைப் பேசியது தவிர வேறு எதனையும் அவர்கள் பெறுவதில்லை. அத்தகையோர் பிறகு பிரச்சனைகளை எழுப்புகின்றனர். சில இளைஞர்கள் சிறுவர்களுக்கு தடுமாற்றம் ஏற்படவும் காரணமாக இருக்கின்றனர். சிலர் சில வீணான செயல்களையும் செய்கின்றனர். அவர்கள் தம்மை எவரும் பார்க்கவில்லை என்று நினைக்கின்றனர். அல்லாஹ் நம்மை எப்போதும் பார்க்கின்றான் என்பதை நாம் எப்போதும் நினைவில் கொள்ள வேண்டும்.

இன்று நான் கூற விரும்பும் முதல் விஷயம், இந்த மாநாடு முழுக்க முழுக்க ஆன்மீக மாநாடு ஆகும் என்பதை நன்றாக மனதில் பதிய வைத்துக் கொள்ள வேண்டும். இது நாம் தக்வாவில் மேம்படுவதற்காக நடத்தப்படுகிறது. இறைவனுடன் தொடர்பு

ஏற்படுத்துவதற்காகவும் அதில் மேம்படவும் நடத்தப்படுகிறது. இவ்விஷயங்கள் அந்நிய விருந்தாளிகளின் முன் மறைக்கப்பட்டு விடுகிறது. அவர்களின் முன் எச்சரிக்கையாக இருக்கப்படுகிறது. சில விஷயங்களை அல்லாஹ்வே திரையிடுகின்றான். சில தவறான நடைமுறைகள் மற்றும் செயல்களிலிருந்து ஜமாஅத்திற்கு அவப்பெயர் ஏற்படலாம். எனவே நான் முதலில் கவனமூட்ட விரும்புவது மாநாட்டின் நோக்கம் என்ன? அந்த நோக்கம் தக்வாவில் அதிகரிப்பதாகும் என்று ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் மாநாட்டின் நோக்கங்கள் பற்றிக் குறிப்பிடும்போது கலந்து கொள்பவர்களுக்கு கூறினார்கள்:

உங்களுக்குள் இறைவனது பயம் உருவாக வேண்டும். இறையச்சம், பயம், இறை உணர்வு, தீமையிலிருந்து விலகுதல், மென்மையான உள்ளம், ஒருவருக்கொருவர் அன்பு, சகோதரத்துவம் ஆகியவற்றில் மற்றவர்களுக்கு முன்மாதிரியாக இருக்க வேண்டும். பணிவு, விருந்தோம்பல், நம்பிக்கை அவர்களிடம் உருவாக வேண்டும்.

(ஷஹாதத்துல் குர்ஆன், ரூஹானி கஸாயின் தொகுதி 6 பக்கம் 394)

பிறகு அன்னார் ஜமாஅத்திற்குப் போதனை செய்தவாறு கூறினார்கள்:

தக்வாவை மேற்கொள்ளுங்கள். தக்வா ஒவ்வொரு பொருளுக்கும் வேர் ஆகும். தக்வாவின் பொருள், ஒவ்வொரு நுட்பத்திலும் நுட்பமான பாவத்தின் வழிகளிலிருந்து தப்பித்தல் ஆகும்.

அவர்கள் கூறுகின்றார்கள்: தக்வா என்றால் எந்த விஷயத்தில் பாவம் ஏற்படுமோ என்ற சந்தேகம் உள்ளதோ அதிலிருந்தும் விலகுவதாகும்.

(மல்ஃபூஸாத் தொகுதி 2 பக்கம் 321 – 1985 ஆம் ஆண்டு இங்கிலாந்தில் அச்சிடப்பட்டது)

அதிலிருந்து தப்பிப்பதாகும். இந்த இலக்கணத்திற்கேற்ப நாம் நுட்பத்திலும் நுட்பமான பாவங்களிலிருந்து தப்பிப்பதற்கு முயற்சி செய்கின்றோமா? எந்த விஷயத்தில் தீமையின் சந்தேகம் கூட இருக்கிறதோ அதிலிருந்தும் நாம் தப்பிக்க முயற்சி செய்கின்றோமா? என ஒவ்வொருவரும் தம்மைப் பற்றி ஆய்வு செய்தால், பிறகு தாமாகவே கணக்கிடப்பட்டு விடும். பிறகு ஒவ்வொருவரும் இதனைக் கணக்கிட்டுக் கொண்டிருந்தால், அதன்படி செயல்படுபவராக இருந்தால், கணக்கிட்ட பிறகு உண்மையிலேயே நாம் அதற்கேற்ப செயல்படுபவராக நம்மைக் கண்டால் அப்போது நாம் மாநாட்டிற்கு வருவதன் நோக்கத்தை நிறைவேற்றி விட்டோம் அல்லது நிறைவேற்ற முயற்சி செய்கிறோம் என்று நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

அது அல்லாமல் சொற்பொழிவுகளைக் கேட்பது, தற்காலிக ஆர்வம் காட்டுதல், முழக்கமிடுதல் ஆகியவற்றில் எந்த பொருளும் இல்லை. சிலர் முழக்கமிடுகின்றனர்; அவர்களின் முகத்தின் அறிகுறிகள் மற்றும் சிரிப்பிலிருந்து இவர்களுக்கு உள்ளத்தின் எந்த எழுச்சியும் இல்லை; மாறாக முழக்கம் என்பது வெறும் முழக்கம் என்ற அளவில் மட்டுமே இருக்கின்றது. முதலில் இந்த அறிகுறிகளும் அசைவுகளும் மறைந்திருந்தன. ஆனால் இப்போது கேமராவின் கண்கள் எவருக்கும் தெரியாமலேயே அவர்களின் பக்கம் சென்று அவர்களின் நிலைமைகளைக் கூறி விடுகிறது. பிறகு அது நிரந்தரமாகப் பாதுகாக்கப்பட்டு விடுகிறது. முதலில் இந்த நிகழ்ச்சிகள் M.T.A –வில் மட்டும் வந்தது. இப்போது Social Media –வில் வருகிறது. அதில் உருவங்கள் தென்படுகின்றன. அதில் முகங்களின் அறிகுறிகள் தென்படுகின்றன.

பிறகு மனிதனின் உட்புற நிலைமைகள் மற்றும் தக்வாவைப் பற்றி ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

இறையச்சத்தின் தாக்கம் இவ்வுலகிலேயே இறையச்சமுடையவருக்கு ஆரம்பமாகி விடுகிறது. கடனாக அல்ல; ரொக்கமாகக் கிடைத்து விடுகிறது. இன்னும் கூறுவதாயின் விஷயத்தின் தாக்கம், விஷ முறிவின் தாக்கம் உடனே உடலில் ஏற்படுவது போன்று இறையச்சத்தின் தாக்கமும் ஏற்படுகின்றது.

ஹுஸூர் அவர்கள் கூறுகிறார்கள்: மனிதன் விஷயத்தை குடித்து விட்டால் அல்லது ஏதாவது ஒரு மருந்தை சாப்பிட்டு விட்டால் அதன் தாக்கம் மனிதனிடம் ஏற்படத் துவங்கி விடுகிறது.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: அவ்வாறே இறையச்சத்தின் தாக்கமும் ஏற்படுகிறது.

(மல்ஃபூஸாத் தொகுதி 2 பக்கம் 324 – 1985 ஆம் ஆண்டு இங்கிலாந்தில் அச்சிடப்பட்டது)

இந்த தகுதியைத்தான் அன்னார் கூறியுள்ளார்கள். ஒரு மனிதன் தக்வாவின்படி நடந்து அதன் தாக்கம் வெளிப்படாமல் போவது நடக்கவே முடியாது. தக்வாவின்படி நடப்பவர் தீமையின் பக்கம் செல்லவே முடியாது. அவரது எண்ணங்கள் கூட தூய்மையடையத் தொடங்கி விடுகின்றன. எனவே இந்த அடிப்படையில் ஒவ்வொருவரும் தன்னை ஆய்வு செய்ய முடியும்.

அன்னார் ஓர் சந்தர்ப்பத்தில் கூறினார்கள்: ''நான் இவை அனைத்தையும் கூறக் காரணம் இறைவன் இந்த ஜமாஅத்தை உருவாக்கியதில் இந்த காரணத்தைத்தான் வைத்துள்ளான். உண்மையான இறை ஞானம் உலகிலிருந்து மறைந்து விட்டது''. உலகியல் பொருட்கள் இவற்றை வென்று விட்டது. அல்லாஹ்வின் பக்கம் கவனம் குறைந்து விட்டது. முழக்கமோ உலகத்தை விட மார்க்கத்திற்கு முன்னுரிமை தருவோம் என்பதாகும். ஆனால் உலகம் முன்னுரிமை பெறும் பல சந்தர்ப்பங்கள் வந்து விடுகின்றன. மார்க்கம் பின்னே போய் விடுகிறது.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறினார்கள்:

உண்மையான இறையச்சமும் தூய்மையும் இக்காலத்தில் காணப்படவில்லை. அதனை திரும்ப நிலைநாட்ட வேண்டியுள்ளது.

(மல்ஃபூஸாத் தொகுதி 7 பக்கம் 277 & 278 – 1985 ஆம் ஆண்டு இங்கிலாந்தில் அச்சிடப்பட்டது)

உலகிலிருந்து காணாமல் போன இறையச்சத்தையும் தூய்மையையும் நிலைநாட்ட இந்த ஜமாஅத் உருவாக்கப்பட்டது. ஆகவே அல்லாஹ்வின் விருப்பத்திற்கேற்ப தக்வாவையும் தூய்மையையும் நிலைநாட்டுவதற்கு முயற்சி செய்பவர் வெற்றி பெறுவார். இவர் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் பார்வையில் உண்மையான அஹ்மதி ஆவார்.

இவரே மாநாட்டின் நோக்கத்தை நிறைவேற்றுபவர். இன்னொரு விஷயம் பற்றிப் பேச விரும்புகிறேன். அதனை நிறைவேற்றுவதும் கூட எப்போது நடக்கும் எனில் நடக்க முடியும் எனில் அதற்கும் உள்ளத்தில் இறையச்சம் வேண்டும். மாநாட்டிற்கு வந்ததன் நோக்கத்தை நிறைவேற்ற விருப்பம் இருக்க வேண்டும்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் மாநாட்டின் நோக்கம் பற்றி விளக்கும்போது கூறியது போன்று மாநாட்டில் கலந்து கொள்ளும் ஒவ்வொருவரிடமும் என்னென்ன சிறப்புகள் இருக்க வேண்டும்? இறை ஞானம் பெறுவதுடன் உள்ளம் மென்மை அடைய வேண்டும். மற்றவருக்காக உள்ளம் மென்மை அடைய வேண்டும். ஒருவருக்கொருவர் அன்பும் சகோதரத்துவமும் இருக்க வேண்டும். பணிவு இருக்க வேண்டும். மென்மை வேண்டும். உண்மையின் உயர்ந்த இலக்கு இருக்க வேண்டும்.

மாநாட்டில் கலந்து கொள்பவர்களில் இரு வகையினர் உள்ளனர். கலந்து கொள்பவர் என்று மட்டும் கூறக் கூடாது. ஒருவகை மாநாட்டின் ஏற்பாட்டாளர்; இன்னொரு வகையினர் அவர்களின் கீழ் கலந்து கொள்ள வருபவர்கள். இரு வகையினரிடமும் இந்த நோக்கத்தை உருவாக்குவது அவசியமாகும். டியூட்டி தருபவர்கள், சேவை செய்பவர்கள், ஊழியர்கள் இதிலிருந்து விலகி விடவும் முடியாது. கலந்து கொள்பவர்கள் விலகி விடவும் முடியாது. இரு பிரிவினரும் தம்மட்டத்தில் இந்த நோக்கத்தை அடைய வேண்டும்.

விருந்தளிப்பவர்களும் இதனைக் கவனத்தில் கொள்ள வேண்டும். இரு பிரிவினரிடம் தக்வா இருந்தால் மட்டுமே இந்த நோக்கம் நிறைவேறும். எனவே, இந்த அடிப்படையில் இந்த இரு பிரிவிற்கும் அவர் தம் பொறுப்புகளை எடுத்துச் சொல்வேன். இருவரிடமும் இந்த சிறப்பு இருந்தது எனில் மாநாட்டின் சூழ்நிலை மகிழ்ச்சிகரமாக இருக்கும். மாநாட்டிற்கு வந்ததன் நோக்கமும் நிறைவேறும். டியூட்டி தருபவர்கள் நாங்கள் டியூட்டி தந்து விட்டோம் என்று நினைக்கலாம். தன்னார்வர்கள் தாம் பெரிய நோக்கத்தை அடைந்து விட்டோம் என்று நினைக்கலாம்.

ஆம்! அல்லாஹ்வை திருப்தி அடையச் செய்து விட்டீர்கள். ஆனால் இதனை நிறைவேற்றி இருந்தால் அல்லது கலந்து கொள்ள வந்தவர்களும் நாங்கள் இறைவனை திருப்தி அடையச் செய்து விட்டோம் என்று கூற முடியாது. நாங்கள் தூரத்திலிருந்து பயணம் செய்து வந்துள்ளோம். ஆம்! நீங்கள் திருப்திப்படுத்தினீர்கள் எனில் இந்த நிலையில் திருப்தி செய்துள்ளீர்கள். உங்களிடம் இறை ஞானத்தை உருவாக்கிக் கொண்டு அடியார்களின் உரிமையின் மீது கவனம் ஏற்பட வேண்டும். முதலில் நான் விருந்தோம்பல் செய்பவர்கள் அல்லது ஊழியர்களுக்கு கவனமூட்ட விரும்புகிறேன். அவர்கள் தமக்குள் இந்தச் சிறப்பை உருவாக்க வேண்டும். தமது உணர்வுகளைக் கட்டுப்படுத்திக் கொள்ள வேண்டும். ஒவ்வொரு நிலையிலும் விருந்தாளிகளைக் கவனத்தில் கொள்ள வேண்டும். நாவை மென்மையாக பயன்படுத்த வேண்டும்.

இதனை ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறினார்கள். பொறுப்பாளர்களுக்கும் ஊழியர்களுக்கும் முதல் கடமை அவர்கள் நாவை மென்மையாக பயன்படுத்த வேண்டும். அடக்கம் காட்ட வேண்டும். பொறுப்பாளர்கள் ஊழியர்களின் முதல் கடமை அவர்கள் எளிமையைக் காட்ட வேண்டும். ஒவ்வொரு நிலையிலும் விருந்தாளிகளைக் கவனிக்க வேண்டும். பொறுப்பாளர்களாகட்டும் ஊழியர்களாகட்டும் நாவை மென்மையாகப் பயன்படுத்த வேண்டும்.

பிறகு ஊழியர்கள் ஒருவருக்கொருவர் உள்ள தொடர்பிலும் அன்பு, தூய்மை, சகோதரத்துவம் இருக்க வேண்டும். இது விருந்தினர்களுக்காகவும் தமக்குள் ஒருவர் மற்றவருடன் உள்ள தொடர்புகளிலும் இருக்க வேண்டும். பொறுப்பாளர்களின் கீழும் இருக்க வேண்டும். வேலை செய்யும்போது ஒருவர் மற்றவர் மீது கோபம் காட்டி, விருந்தாளிகளிடம் குறிப்பாக அந்நியர்களான விருந்தாளிகளிடம் இது தெரிய வந்தால் அஹ்மதிகளின் மாநாட்டில் ஒருவருக்கொருவர் அன்புடன் இருப்பார்கள் என்றும், ஒருவருக்கொருவர் கோபம் காட்ட மாட்டார்கள் என்றும் கேள்விப்பட்டிருக்கும் நிலையில் இது போன்ற விஷயங்களை பார்த்தால், இருவர் குரலை உயர்த்திப் பேசுவதைக் கேட்டால் அவர்கள் மீது தவறான தாக்கம் ஏற்படும்.

ஊழியர்கள் எப்போதும் நினைவில் கொள்ள வேண்டும். உங்களை நீங்கள் சில நாட்களுக்காக சேவை செய்ய அர்ப்பணித்து விட்டீர்கள். அந்த சேவையும் மிக உயர்ந்த நோக்கத்தைக் கொண்டுள்ளது. ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய விருந்தினர்களுக்கு சேவை செய்யும் பணியில் ஈடுபட்டுள்ளீர்கள். இந்த நிலையில் அத்தகைய செயல்பாடுகள் இருந்தால் அதனால் ஏதாவது விருந்தாளிகளுக்கு கஷ்டம் ஏற்படும் அல்லது ஊழியர்களுள் ஒருவருக்குக் கஷ்டம் ஏற்படும். தர்பிய்யத்தின் ஒரு பகுதியான உணர்வுகளை கட்டுப்பாட்டில் வைக்க வேண்டும். அவர் அதிகாரியாக இருந்தாலும் சரி ஊழியராக இருந்தாலும் சரி, பார்கிங்காக இருந்தாலும் சரி, டிராஃபிக் கன்ட்ரோலாக இருந்தாலும் சரி துப்புரவுப் பணியாக இருந்தாலும் சரி அனைவரும் இந்நாட்களில் உயர் நல்லொழுக்கத்தைக் காட்ட வேண்டும்.

அல்லாஹ் திருக்குர்ஆனில் கூறுகிறான்: قُوْلُوْا لِلنَّاسِ حُسْنًا அதாவது மக்களிடம் மென்மையுடன் பேசுங்கள். இவற்றை அல்லாஹ் நல்லொழுக்கத்தை நிலைநாட்டுவதற்காகக் கூறியுள்ளான்.

இது ஒரு பொதுவான வழிகாட்டலாகும். ஒரு நம்பிக்கையாளரிடம் உயர்ந்த நல்லொழுக்கம் வெளிப்பட வேண்டும். ஆனால் இந்த சிறப்பான நிலைமைகளில் அவர்கள் தம்மை மாநாட்டின் விருந்தாளிகளின் சேவைக்காக எடுத்து வைத்த பிறகு அந்த விருந்தாளிகளோ ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் விருந்தாளிகளாக இருக்கின்ற நிலையில் அந்த விருந்தாளிகள் தமது ஆன்மீக மற்றும் அறிவு மற்றும் செயல் ரீதியான நிலைமைகளை மேம்படுத்த வந்திருக்கின்ற நிலையில் அவர்களுக்கு ஊழியர்கள் தமது செயல்கள் மூலமும் செயல் தர்பிய்யத் செய்ய முடியும். எனவே இந்த அடிப்படையில் பணி செய்தால் இரு மடங்கு நன்மைக்குரியவர்கள் ஆவீர்கள்.

ஒன்று, மாநாட்டில் பணியாற்றியதற்காக. இரண்டாவது உங்கள் நல்லொழுக்கத்தால் மற்றவருக்கு தர்பிய்யத் வழங்கியதற்காக ஆகும். மற்றவர்களுக்கும் மாநாட்டிற்கு வரும் ஒவ்வொருவருக்கும் நல்ல ஒழுக்கத்தை வெளிப்படுத்த வேண்டும் என்ற உணர்வை ஏற்படுத்த வேண்டும். ஒருவர் தவறான முறையில் பேசி விட்டால் தவறாகப் பேசியவர் இதனைப் பார்ப்பார். பணியாளர் மென்மையாக நல்ல முறையில் பதில் சொல்கிறார் என்றால் இந்த செயல் ரீதியான முன்மாதிரி அடுத்தவருக்கு தன்னாலேயே அவரது தவறை புரிய வைத்து செயல் ரீதியிலான தர்பிய்யத் வழங்கும்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், நல்லொழுக்கத்தை விட தராசில் அதிக எடையுள்ளது வேறு எதுவும் இருக்க முடியாது என்று கூறினார்கள்.

(சுனன் அபீ தாவூது, கிதாபுல் அதப், பாப் ஃபீ ஹுஸ்னுல் ஹல்க், ஹதீஸ் எண் 4799)

எனவே எடை போடுங்கள். தராசில் நிறுத்துப் பாருங்கள். நல்லொழுக்கத்தின் எடை அதிகமாக இருக்கும். ஏனெனில் நல்லொழுக்கமே உலகில் குழப்பங்களை அகற்றும். நல்லொழுக்கமே அல்லாஹ்வின் உரிமைகளின் பக்கம் கவனம் ஏற்படுத்தும்.

இன்னும் சொல்வதாயின், சில இடங்களில் அடியார்களின் உரிமை அல்லாஹ்வின் உரிமையை விட அதிகமாக உள்ளது என்று ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறினார்கள்.

(மல்ஃபூஸாத் தொகுதி 10 பக்கம் 290 – 1985 ஆம் ஆண்டு இங்கிலாந்தில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறியதுபோன்று நல்லொழுக்கம் காரணமாக உணர்வுகள் கட்டுப்பாட்டில் இருக்கும். பொறுமை வெளிப்படும். மற்றவரின் தவறான பேச்சுக்கும் மென்மையாக பதில் தரும் தைரியம் ஏற்படும். மனிதனது பல மற்ற பாவங்களுக்கு மன்னிப்புக்குக் காரணமாக அமையும். முதலில் ஒவ்வொரு ஊழியரும் உறுதியாகச் செயல்பட வேண்டியது நல்லொழுக்கத்தை வெளிப்படுத்துவதாகும்.

பிறகு பாருங்கள்! இது எத்தனை குறைந்த விலை வியாபாரமாக உள்ளது? இவ்வாறு அம்மக்களுக்கு அல்லாஹ் சிறப்பாக அருள்கிறான். அவனுக்காக அவர்கள் தமது நாவை அடக்கிக் கொள்கிறார்கள். முகத்தின் மீது புன்னகையை வைத்துக் கொள்கிறார்கள். டியூட்டியின் சுமை காரணத்தால் அல்லது ஒருவரின் தவறான நடத்தை காரணமாக எனக்கு கோபம் வந்து விட்டது என்று எவரும் கூறினால் நாம் எப்போதும் நமது எஜமானரும் வழிகாட்டியுமான ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களைப் பார்க்க வேண்டும். அன்னாரைப் பற்றி அல்லாஹ் அழகிய முன்மாதிரி என்று கூறியுள்ளான்.

அவர்களுக்கு வராத துன்பம் எது இருக்கிறது. எந்த கஷ்டம் அவர்களுக்கு வரவில்லை. கஷ்டம் தரும் காரணங்கள் எது உருவாகவில்லை? மனிதன் கற்பனையில் எத்தனை கடும் சூழ்நிலை ஏற்பட முடியுமோ, சிக்கல்கள் ஏற்பட முடியுமோ, கஷ்டம் ஏற்பட முடியுமோ அவை அனைத்தையும் விட அதிகமாக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு வந்தன. அவர்கள் சகித்துக் கொண்டார்கள்.

இருந்தும் சஹாபா கூறினார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை விட அதிகமாக வேறு எவரையும் புன்னகைப்பவர்களாக காணவில்லை. அன்னாரின் அருளுக்குரிய முகத்தில் புன்னகை எப்போதும் காணப்பட்டது.

(சுனன் திர்மிதி, அப்வாபுல் மனாகிப்.... ஹதீஸ் எண் 3641)

இதுவே நமது எஜமானரும் வழிகாட்டியுமான ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய முன்மாதிரியாக இருந்தது.

பிறகு அன்னார் கூறினார்கள்: எச்சரித்தார்கள். எவர் மென்மையிலிருந்து விலக்கப்பட்டு விட்டாரோ அவர் நன்மையிலிருந்தும் விலக்கப்பட்டார்.

(சுனன் திர்மிதி, அப்வாபுல் பிர்ரி வஸ்ஸிலா.... ஹதீஸ் எண் 2013)

உங்களிடம் மென்மை இல்லை என்றால் பிறகு நீங்கள் நன்மையிலிருந்து விலக்கப்படுவீர்கள். இது ஊழியருக்கும் பொருந்தும். விருந்தாளிகளுக்கும் பொருந்தும். பெரும்பாலாருக்கு ஒருவருக்கொருவர் கருத்து மோதல் செய்யும் வழக்கம் இருக்கும். அவர்களுக்கும் இது தேவையாகும். இவர்கள் ஒவ்வொரு நன்மையிலிருந்தும் விலக்கப்படுவார்கள்.

எனவே அல்லாஹ் உங்களுக்கு ஒரு வருடத்திற்குப் பிறகு வாய்ப்பு வழங்குகிறான். ஒவ்வொருவரும் குறிப்பாக ஊழியர்கள் தமது நல்லொழுக்கம் மற்றும் மென்மையின் தரத்தையும், முகத்தில் புன்னகையையும் முன்னரை விட அதிகமாகக் காட்ட வேண்டும். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் விருந்தாளிகளுக்கு நல்லொழுக்கம் காட்டுவது பற்றிப் போதனை செய்தார்கள். அதனை ஒவ்வோர் ஊழியரும் கவனத்தில் கொள்ள வேண்டும்.

விருந்தாளியின் உள்ளம் கண்ணாடி ஆகும். இலேசாக ஏதாவது பட்டு விட்டாலும் அது உடைந்து விடும் என்று அன்னார் கூறினார்கள்.

(மல்ஃபூஸாத் தொகுதி 5 பக்கம் 406 – 1985 ஆம் ஆண்டு இங்கிலாந்தில் அச்சிடப்பட்டது)

பிறகு விருந்தாளிகளுக்கு சேவை செய்பவர்களுக்குப் பொதுவான வழிகாட்டல் வழங்கியவாறு கூறினார்கள்:

பாருங்கள்! நிறைய விருந்தாளிகள் வருகின்றனர். சிலரைக் குறைவாகவே அறிந்திருப்பீர்கள். சிலரை அறிந்திருக்க மாட்டீர்கள். அனைவரையும் கண்ணியத்திற்குரியவராகக் கருதி விருந்தோம்பல் செய்யுங்கள்.

(மல்ஃபூஸாத் தொகுதி 6 பக்கம் 226 – 1985 ஆம் ஆண்டு இங்கிலாந்தில் அச்சிடப்பட்டது)

எனவே விருந்தோம்பலில் எந்த வகைப் பாகுபாடும் கூடாது. தெரிந்தவர்களுக்கு நல்ல கவனிப்பு, தெரியாதவர்களைக் கவனிப்பதே இல்லை அல்லது வேறு விதமாக நடப்பது ஆகியவை கூடாது. இவ்வருடம் அமெரிக்காவிலிருந்தும் மற்ற நாடுகளிலிருந்தும் அதிகமான விருந்தினர்கள் வந்திருக்கின்றனர். முதலில் ஐரோப்பா மற்றும் ஐரோப்பிய பகுதிகளிலிருந்து மட்டும் வந்தனர். வந்த ஒவ்வொருவரும் நல்ல மகிழ்ச்சிகரமான நினைவுகளுடன் ஜெர்மனியின் ஆண்டு மாநாட்டின் விருந்தோம்பல் செய்பவர்கள் பற்றிய நல்ல நினைவுகளுடன் திரும்பிச் செல்ல வேண்டும். இது பணி செய்கின்ற உங்களைச் சார்ந்துள்ளது.

எனவே இந்த அடிப்படையில் உங்கள் பொறுப்பை உணருங்கள். குறிப்பாக ஜமாஅத் அல்லாத விருந்தினர்களிடம் மாநாட்டிற்கு வந்துள்ள ஒவ்வொருவரும் அவர் ஊழியராக இருந்தாலும் சரி அஹ்மதியானாலும் சரி இஸ்லாத்தின் அழகிய போதனையின் செயல் முன்மாதிரியைக் காட்டியவாறு தப்லீகிற்குக் காரணமாக ஆக வேண்டும். இது அழகிய போதனையைக் காட்டுவதற்குக் காரணமாக அமைய வேண்டும்.

இந்த அடிப்படையில் இவர்கள் அனைவரும் அமைதியான தப்லீக் செய்கிறார்கள். இவர்கள் கலந்து கொள்பவராக இருந்தாலும் சரி, டியூட்டி கொடுப்பவர்களாக இருந்தாலும் சரி ஒவ்வொரு பிரிவின் தொண்டர்களும் நினைவில் கொள்ள வேண்டும். இந்த துறை நம்முடையது. நான் கூறியது போன்று போக்குவரத்துத் துறை, பார்க்கிங் துறை, ரிஜிஸ்ட்ரேஷன் மற்றும் ஸ்கேனிங் துறை, உணவு சமைக்கும் துறை, உணவு பராமரிக்கும் துறை, துப்புரவுப் பணி செய்யும் துறை, ஒழுக்கத்தை நிலைநாட்டும் துறை என ஒவ்வொரு துறையும் விருந்தினர்களுக்குப் பணி மட்டும் செய்யவில்லை. மாறாக, அமைதியான தப்லீகும் செய்கிறது.

எனவே உங்கள் டியூட்டியின் இந்த முக்கியத்துவத்தையும் உணருங்கள். ஒழுக்கம் என்பது முகத்தில் கடுகடுப்பைக் காட்டுவதல்ல. அதனால் தாக்கம் ஏற்படும். குறிப்பாக யூ.கே ஜல்ஸாவில் சிறுமிகள் ஒழுக்கத்தை நிலைநாட்டினார்கள். அதுவும் புன்னகை சிந்தும் முகத்துடன் நிலைநாட்டினார்கள். ஒருவர் என்னிடம், அவர் சிறுமி அல்ல; லஜ்னா ஆகி விட்டார் என்று கூறினார்.

ஒரு சிறுமி என்னை வெட்கப்பட வைத்து விட்டார். பெண்கள் தமக்குள் பேசிக் கொண்டிருந்தால் புன்னகை தவழும் முகத்துடன் அமைதியாக இருங்கள் என்ற போர்டை முன்னே காட்டினாள் என்றும் கூறினார். வாயால் எதுவும் கூறுவதில்லை. புரிந்து கொள்ளக் கூடியவர்கள் டியூட்டியில் உள்ளவர்கள் கவனமூட்டும் போது அமைதியாகி விடுவார்கள்.

ஆனால் அறிவற்ற ஒழுக்கமற்றவர்கள் அல்லது சில ஒழுக்கமற்றவர்கள் எப்படி இருக்கிறார்கள் என்றால் வாயை மூடுமாறு கூறினால், டியூட்டி செய்பவர்களைப் பார்த்து எங்களுக்கு அமைதியாக இருக்கத் தெரியும் என்று கூறுகிறார்கள். குறிப்பாக அத்தகைய பெண்களிடம் இளவயது பெண்கள் பேச வேண்டாம். தமது இன்சார்ஜிடம் கூறட்டும். அவர்கள் புரிய வைப்பார்கள்.

எனவே பெரிய வயது பெண்களிடம் சிறுமியர் வார்த்தை வளர்க்க வேண்டியதில்லை. எந்த இடத்திலும் சரி குறிப்பாக உணவு உண்ணும் இடத்தில் சிலர் நேரமற்ற நேரத்தில் வந்தால் அவர்களுக்கு நிர்பந்தம் இருக்கலாம். நோயாளியாக இருக்கலாம். குழந்தை அழுது கொண்டிருக்கலாம். எவ்வளவு முடியுமோ அவ்வளவு உதவி செய்ய வேண்டும். முடியாவிட்டால் அமைதியாக இனிமையாக பதில் சொல்ல வேண்டும். மகிழ்ச்சியுடன் சொல்ல வேண்டும். அவர்கள் கடுமையான வார்த்தைகளைப் பயன்படுத்தினாலும் அமைதியாக இருக்க வேண்டும்.

அது போன்று குளிக்கும் அறையில் சுத்தத்தை கவனத்தில் கொள்ள வேண்டும். நான் இவற்றை குறித்து நேற்று ஊழியர்களிடம் பேசும்போது கவனமூட்டினேன். டியூட்டியை அழகிய முறையில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் விரும்புவது போன்று செய்ய வேண்டும். இதற்கு பணிவும் அடக்கமும் அவசியமாகும்.

உள்ளத்தில் மற்றவர் மீது அன்பு இருக்க வேண்டும். இவை எல்லாம் இருந்தால் உங்கள் டியூட்டி அல்லாஹ்வுக்காகச் செய்ததாக இருக்கும். அதே போன்று வரக்கூடிய விருந்தினர்களும் சரி முதலிலேயே நான் கூறியுள்ளேன். நீங்கள் இங்கு வந்ததன் நோக்கம் அல்லாஹ்வுடன் தொடர்பு ஏற்படுத்துவதாகும். மேலும் அதில் உயர்ந்த தரத்தை நிலைநாட்டுவதும் ஆகும். பிறகு அவனது அடியார்களின் உரிமையை வழங்குவதன் பக்கம் கவனம் செலுத்த வேண்டும்.

வரக்கூடிய விருந்தினர்கள் நினைவில் கொள்ள வேண்டும். இந்த மாநாட்டில் கலந்து கொள்வது நான் கூறி வந்தது போன்று தக்வாவை உருவாக்குவதாகும். உங்கள் அறிவு, செயல், ஆன்மீக நிலைகளை மேம்படுத்துவதாகும். இது உங்கள் நோக்கமாக இருக்கும் எனில் பிறகு எந்த ஒரு கவலையும் புகாரும் குறிப்பாக பணியாளர்களுடன் ஏற்படவே முடியாது.

இங்கு டியூட்டி தருபவர்கள், இளைஞர்கள், பள்ளியில் படிப்பவர்கள், யுனிவர்சிட்டியில் படிப்பவர்கள், சில உயர்ந்த பொறுப்புகளில் பணியாற்றுபவர்கள் ஆகியோர் டியூட்டி கொடுப்பது ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களது விருந்தினர்கள் வருகின்றனர் என்ற அடிப்படையில்தான்.

எனவே விருந்தினர்களும் தமது தரத்தை நிலைநாட்ட வேண்டும். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய விருந்தினர்களாக ஆகக் கூடிய தகுதியை உருவாக்க வேண்டும். மாநாட்டில் கலந்து கொள்வதால் மட்டும் விருந்தினராகி விட முடியாது. ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களது போதனையின்படி செயல்படவில்லை என்றால் நாங்கள் ஆயிரம் முறை மாநாட்டிற்கு வந்துள்ளோம். நாங்கள் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களது விருந்தினராக வந்துள்ளோம் என்று நீங்கள் கூறினாலும் நீங்கள் விருந்தினர்கள் அல்ல. ஏனெனில் உங்கள் செயல்கள் நீங்கள் அப்படிப்பட்டவர்கள் இல்லை என்று நிரூபித்துக் காட்டுகிறது.

எனவே, கலந்து கொள்பவர் தம்மை இதனைப் பின்பற்றத் தேவையில்லாதவர் என்று கருத வேண்டாம். நீங்கள் உங்கள் நடத்தைகளைச் சரியாக வைக்க வேண்டும். பணி செய்பவர்களுக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும். நிச்சயமாக அவர்கள் உங்களுக்கு உதவி செய்வதற்கு நியமிக்கப்பட்டுள்ளார்கள்தான். ஆனால் உங்களிடமும் நல்லொழுக்கம் வெளிப்பட வேண்டும். ஓர் உணர்வுடன் இளைஞர்கள் பணி செய்ய வருகின்றனர். அந்த விருந்தினர்களுடன் நல்ல முறையில் நடந்து கொள்ள வேண்டும். நல்லொழுக்கத்தை வெளிப்படுத்த வேண்டும்.

ஏனெனில் அந்த தொண்டு செய்யும் ஆர்வம் மேலும் பொங்கி எழ வேண்டும். மாறாக, விருந்தினர்களின் நடவடிக்கைகளின் காரணமாக அவர்கள் வரும் வருடம் டியூட்டியிலிருந்து ஓடி விடக் கூடாது.

பிறகு ஜெர்மனியில் வசிக்கும் விருந்தினர்கள் நினைவில் கொள்ள வேண்டும். அவர்கள் ஒரு வகையில் விருந்தினர்களாக இருந்தாலும் இன்னொரு வகையில் விருந்தளிப்பவர்கள் ஆவீர்கள். ஜெர்மனிக்கு வெளியிலிருந்து வருபவர்களுக்காக அவர்கள் தியாகம் செய்ய வேண்டும். ஜெர்மனியில் வசிக்காமல் வெளியிலிருந்து மாநாட்டிற்கு வந்துள்ளவர்கள் விருந்தாளிகள் ஆவர். ஜெர்மனிவாசிகள் விருந்தளிப்பவர்களாகி விடுகின்றனர். எனவே அவர்களுக்காக நீங்கள் தியாகம் செய்ய வேண்டும். இருப்பதற்கு இடம் கொடுக்க வேண்டும். சாப்பிடும் இடத்தில் இடப்பற்றாக்குறை இருந்தால் அவர்களுக்கு இடத்தைக் கொடுக்க வேண்டும். எந்த வகை சேவைக்கான தேவை இருந்தாலும் இங்குள்ள அனைவருக்கும் கடமை உள்ளது. சில நேரங்களில் மொழிப் பிரச்சனையால் உங்கள் உதவி தேவைப்படலாம். தேவைப்படும் இடத்தில் உதவி செய்ய வேண்டும். இது டியூட்டி தருபவர்களின் வேலை மட்டுமல்ல. மாறாக, அத்தகையவர்களுக்கு உதவி செய்வது இங்கு வசிக்கின்ற ஒவ்வோர் அஹ்மதியின் கடமையாகும். இதுவே ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் வழிகாட்டலுக்கிணங்க அன்பு, சகோதரத்துவத்தை வெளிப்படுத்துவதாகும்.

அதுபோன்று ஜமாஅத்திற்கு வெளியிலிருந்து விருந்தாளிகள் வந்துள்ளனர். அவர்களுக்கும் நான் கூறியது போன்று ஒவ்வோர் அஹ்மதியும் முன்மாதிரி காட்ட வேண்டும். உங்கள் அனைவரின் முன்மாதிரியைப் பார்த்துத்தான் அவர்களுக்கு இஸ்லாமிய சமுதாயத்தின் அழகிய தோற்றம் தென்படும். ஒவ்வோர் அஹ்மதியும் எளிமை, மென்மை, ஒருவருக்கொருவர் அன்பு, சகோதரத்துவம் ஆகியவற்றை நிலைநாட்டினால் அக்காட்சி மக்களுக்குத் தென்படும். ஆண்கள், பெண்கள் இரு தரப்பும் இவ்விஷயத்தைக் குறிப்பாகக் கவனத்தில் கொள்ள வேண்டும்.

உணவு விஷயத்தில் எங்காவது கூடுதல் குறைவு ஏற்பட்டால் சகித்துக் கொள்ள வேண்டும். இங்கு எந்த அசல் உணவுக்காக வந்தீர்களோ அது ஆன்மீக மற்றும் அறிவு உணவு ஆகும். அதனைப் பெற முயற்சி செய்யுங்கள். இது அவசியமாகும். அதே போன்று கடை வீதிகளுக்கும் அதற்குரிய நேரத்தில் செல்லுங்கள். மாநாட்டின் நேரத்தில் கடைகள் திருந்திருந்தாலும் அமர்வுகள் நடந்து கொண்டிருக்கும்போது தர்பிய்யத் துறை செல்லக் கூடாது என்றால், நாங்கள் செல்ல வேண்டும்; எங்களுக்கு பசி எடுக்கிறது என்கிறார்கள்.

இவர்களுக்காக நான் முதலிலேயே பலமுறை கூறி விட்டேன். விருந்தோம்பல் அங்கும் இருக்க வேண்டும். பிறகு பெண்களின் பஜார், ஆண்களின் பஜார் இரண்டிலும் மாநாட்டின் புனிதத்துவம், சூழ்நிலை இவற்றைக் கவனத்தில் கொள்ளுங்கள். மாநாட்டுத் திடலில் இருக்கும்போதுதான் மாநாட்டின் புனிதத்துவம் பேண வேண்டும் என்பதல்ல. இந்தப் பகுதிக்கு வந்து விட்டாலே மாநாட்டின் எல்லா இடங்களிலும் கூடாரங்கள், மர்கஸி ஆகிய அனைத்தும் மாநாட்டின் இடங்கள்தான். இங்கும் கூட நீங்கள் மாநாட்டின் புனிதத்துவத்தைப் பேண வேண்டும்.

قُوْلُوْا لِلنَّاسِ حُسْنًا என்று திருக்குர்ஆனின் கட்டளை பற்றி முதலில் கூறினேன். இது பணியாளர்களுக்கு மட்டும் இல்லை. ஒவ்வொரு முஸ்லிமுக்கும் உள்ளதாகும். குறிப்பாக ஒவ்வோர் அஹ்மதியும் இதனைக் கவனத்தில் கொள்ள வேண்டும். நான் பணியாளர்களிடம், நல்ல ஒழுக்கத்தை வெளிப்படுத்துங்கள் என்று கூறினேன். இன்னும் தீய ஒழுக்கம் காட்டாதீர்கள் என்றும் கூறினேன்.

இதன் பொருள், அவர்களின் பொறுமையை நீங்கள் சோதித்துக் கொண்டே இருக்க வேண்டும் என்பதல்ல. விரும்பத்தகாத நிலைமையை உருவாக்க வேண்டும் என்பதல்ல. எங்கெல்லாம் எல்லா துறையின் ஊழியர்களும் சரி, எவர்கள் உங்களிடம் வேண்டுகோள் விடுத்தாலும் சரி, வழிகாட்டல் வழங்கினாலும் சரி உயர் நல்லொழுக்கத்தை வெளிப்படுத்தியவாறு அதற்கு ஒத்துழைப்பு வழங்குங்கள்.

எனவே, திருக்குர்ஆனின் கட்டளையான நல்ல முறையில் நடந்து கொள்ளுங்கள் என்பது கலந்து கொள்கின்ற ஒவ்வொருவருக்கும் பொருந்தும். மாநாட்டின் நேரத்தில் நிகழ்ச்சிகள் நடைபெறும்போது நிர்பந்தமாக எழுந்து செல்ல

வேண்டியதிருந்தாலேயொழிய அமர்ந்து மாநாட்டின் நிகழ்ச்சிகளைக் கேளுங்கள். ஒவ்வோர் அஹ்மதிக்கும் ஏதாவது விஷயம் சிறந்ததாக இருக்கும். அதாவது வாழ்வை மேம்படுத்த ஒரு வழியாக இருக்கும். எனவே மாநாட்டின் போதும், போகும் போதும் வரும் போதும் இறை தியானம், ஸலாவத், இஸ்திக்ஃபார் ஓதிக் கொண்டே இருங்கள். இது ஒவ்வொருவருக்கும் அவர்களது வாழ்வை மேம்படுத்துவதற்குத் தேவையானதாகும். மேலும் ஜமாஅத்தின் நிலையை மேம்படுத்தவும் அவசியமாகும்.

முஸ்லிம் உம்மத் இப்போது எந்த நிலையைக் கடந்து கொண்டிருக்கிறதோ அதனை மேம்படுத்தவும் துஆ செய்யுங்கள். இப்போது உலகில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது அதிகமான தரூது ஓதுவது அவசியமாகும். கோடிக்கணக்கான முஸ்லிம்கள் தொழுகையில் மட்டும்தான் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் மீது ஸலவாத் ஓதுகிறார்கள். ஆனால் நாம் பார்க்கிறோம். மார்க்க ரீதியிலும் சரி, ஆன்மீக ரீதியிலும் சரி, உலகியல் ரீதியிலும் சரி முஸ்லிம்களின் நிலை மோசமாக உள்ளது. எனவே இந்த தரூது சம்பிரதாயமாக ஓதப்படுகிறது. அவர்களின் தொழுகை அழிவுக்குக் காரணமாக இருக்கிறது. அல்லாஹ்வின் கூற்றிற்கேற்ப அவர்களின் தொழுகையானது அவர்களின் முகத்தில் வீசி எறியப்படுகிறது.

எனவே, மாசற்ற முறையில் பணி பற்றுறுதியுடன் தமது நிலைமைகளில் மாற்றத்தை ஏற்படுத்தியவாறு உள்ளத்தில் அல்லாஹ்வின் மீது தக்வாவை ஏற்படுத்துவதற்கு அஹ்மதிகளின் மீது பெரும் பொறுப்பு உள்ளது. அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் தரூது மற்றும் ஸலாத்தை அனுப்ப வேண்டும். இஸ்லாத்தின் முன்னேற்றத்திற்காக துஆ செய்ய வேண்டும்.

இந்த நாடுகளில் வந்து உலகியல் விருப்பங்களை மட்டும் நிறைவேற்றுபவர்களாகி விடாதீர்கள். மாறாகத் தூய மாற்றத்தை உங்களிடம் ஏற்படுத்துங்கள். தரூதுடன் திக்ரே இலாஹியினால் உங்கள் நாவுகளை நனையுங்கள். அல்லாஹ்விடம் துஆ செய்யுங்கள். அல்லாஹ் இந்த மாநாட்டின் நோக்கத்தை நிறைவேற்றுபவர்களாக நம்மை ஆக்குவாயாக. அதன் பரக்கத்துகளிலிருந்து பங்கு பெறுபவர்களாக ஆவோமாக.

இந்தப் பயணம் ஒரு நல்ல நோக்கத்திற்காக உள்ளது. அந்த அருள் நமக்கு எப்போதும் நம்மை வந்து சேரட்டுமாக. நமது சந்ததிகளிடமும் தக்வா உருவாகட்டும். அல்லாஹ்வுக்கு பிடிக்காத விஷயங்களிலிருந்து தப்பிப்போமாக. நமது பிள்ளைகளும் தலைமுறைகளும் கூட தப்பிக்கட்டுமாக.

நமது பொருள்களில் பரக்கத் ஏற்படட்டுமாக. நமது மற்றும் நமது தலைமுறையின் பொருள் திரட்டும் முறை அல்லாஹ்வின் பார்வையில் விரும்பத்தக்கதாக, தவறானதாக மற்றும் ஹராமான (விலக்கப்பட்ட) பொருள்களின் பட்டியலில் வராமல் இருக்கட்டுமாக. நமது மனைவி மக்கள் தமது துணைவர்களுக்காக துஆ செய்யட்டுமாக. அல்லாஹ் எப்போதும் நம்மை தனது மார்க்கத்தில் நிலை நிற்கச் செய்வானாக.

மார்க்கம் வீணாகி விடும் அபாயமுள்ள ஒவ்வொரு சோதனையிலிருந்தும் அல்லாஹ் நம்மை பாதுகாப்பானாக. எப்போதும் ஸிராத்தே முஸ்தகீமில் செல்பவர்களாக இருப்போமாக. திக்ரே இலாஹி நடையிலும் துஆக்களை நினைவில் கொள்ளுங்கள்.

இந்த நாட்களில் குறிப்பாக, பொதுவாக இதற்குப் பிறகும் தொழுகையை ஜமாஅத்துடன் பேணுங்கள். குறிப்பாக இங்கு வாழ்பவர்கள் ஃபஜ்ர் தொழுகைக்குக் கண்டிப்பாக வந்து கலந்து கொள்ளுங்கள். இன்னும் சொல்வதாயின், இங்கு தஹஜ்ஜுத்திற்கும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அதற்காகக் கண்டிப்பாக எழுந்து கலந்து கொள்ளுங்கள். அதேபோன்று பணியாளர்கள் டியூட்டி வேளையில் ஜமாஅத்தாகத் தொழ முடியாத நிலையில் டியூட்டி முடிந்தவுடன் உடனே ஜமாஅத்தாகத் தொழ ஏற்பாடு செய்யுங்கள். நேரத்தை அவ்வாறு வையுங்கள். டியூட்டிக்கு முன்னால் ஜமாஅத்துடன் தத்தமது இடத்தில் தொழுங்கள். அல்லாஹ் ஒவ்வொருவரையும் தனது விருப்பத்தின் வழியில் நடக்கும் வாய்ப்பை வழங்குவானாக. ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களது ஜமாஅத்தில் சேர்ந்ததன் ஆன்மாவை புரிந்தவாறு அதன் நோக்கத்தை நிறைவேற்றும் வாய்ப்பை வழங்குவானாக.

அந்த ஆன்மா என்ன? ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் வார்த்தைகளிலேயே கூறுகிறேன். அன்னார் கூறுகின்றார்கள்: எதுவரை நம்முடைய ஜமாஅத் தக்வாவை மேற்கொள்ளவில்லையோ அதுவரை ஈடேற்றம் பெற முடியாது. அல்லாஹ் தமது பாதுகாப்பில் எடுக்க மாட்டான்.

(மல்ஃபூஸாத் தொகுதி 5 பக்கம் 458 – 1985 ஆம் ஆண்டு இங்கிலாந்தில் அச்சிடப்பட்டது)

ஜமாஅத்தினர் தமது வீட்டை திக்ரே இலாஹியினால் நிரப்புங்கள். தான தர்மங்கள் வழங்குங்கள். அல்லாஹ் உங்கள் மீது கருணை காட்டுவதற்காகப் பாவங்களிலிருந்து தப்பித்துக் கொள்ளுங்கள்.

(மல்ஃபூஸாத் தொகுதி 5 பக்கம் 459 – 1985 ஆம் ஆண்டு இங்கிலாந்தில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் விருப்பத்திற்கிணங்க வாழ்வைக் கழிக்க அல்லாஹ் வாய்ப்பு வழங்குவானாக. மாநாட்டின் அருளிலிருந்து பயனடைபவர்களாவோமாக. ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் மாநாட்டில் கலந்து கொள்பவர்களுக்காக செய்த துஆவிலிருந்து பயனடைவோமாக. இந்த நாட்களிலும் பின்னாளிலும் அந்த துஆவிலிருந்து பயனடைந்து வருவோமாக. அல்லாஹ் நமக்கு எப்போதும் நன்மை செய்யும் வாய்ப்பினை வழங்குவானாக.

ஓர் அமைப்பு ரீதியிலான விஷயத்தை கூறிக் கொள்கிறேன். முதலில் நான் கூறவில்லை. பாதுகாப்பு அடிப்படையில் உங்கள் வலமும் இடமும் கவனித்துக் கொள்ளுங்கள். கலந்து கொள்பவர்களும் சரி, டியூட்டி கொடுப்பவர்களும் சரி. இதற்காக ஒரு பிரிவு நியமிக்கப்பட்டுள்ளது. அவர்களுக்கு முழுமையாக ஒத்துழைப்பு வழங்குங்கள். ஏதாவது ஒரு பொருளைப் பார்த்தால் உடனே நிர்வாகத்திற்குத் தகவல் கொடுங்கள். அல்லாஹ் கலந்து கொள்கின்ற ஒவ்வொருவரையும் தமது பாதுகாப்பில் வைப்பானாக. எவருக்கும் எந்த விதமான எந்த சேதம் ஏற்படுத்தும் நிகழ்வும் நடக்காமல் இருக்கட்டுமாக.

## வக்ஃபே நவ் பெற்றோர்களின் கடமை

(ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் **28.10.2016** அன்று ஆற்றிய ஜுமுஆ குத்பா பேருரையிலிருந்து...)

வக்ஃபே நவ் பிள்ளைகள் தமது போதுமென்ற மனதின் தரத்தை மிகவும் அதிகரித்துக் கொள்ள வேண்டும். தமது தியாகத்தின் தரத்தை மிகவும் அதிகரிக்க வேண்டும். நாம் பொருளாதார ரீதியாக பின்தங்கி இருப்பதால் நமது சகோதர சகோதரிகள் நம்மை இழிவானவர்களாகக் கருதுவார்கள் என்ற எண்ணம் கூடாது அல்லது மற்றவர்களை கவனிப்பது போன்று பெற்றோர்கள் நம்மைக் கவனிக்க மாட்டார்கள் என்ற எண்ணமும் கூடாது. வக்ஃபே நவ் பிள்ளைகள் கீழானவர்கள் என்ற எண்ணம் முதலில் பெற்றோர்களுக்கு இருக்கக் கூடாது. வக்ஃபே நவ் பிள்ளைகளின் அந்தஸ்து மிகவும் உயர்வானதாகும் என்ற சிந்தனைதான் பெற்றோர்களுக்கு இருக்க வேண்டும்.

## ஜமாஅத் உறுப்பினர்கள் அதிகம் அதிகமாக இந்த துஆக்களை செய்து வாருங்கள்

சய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் இங்கிலாந்தில் நடைபெற்ற ஆண்டு மாநாட்டின் முதல் நாளில் அதாவது 3 ஆகஸ்ட் 2018 அன்று நிகழ்த்திய மாநாட்டின் துவக்க உரையில் ஜமாஅத் உறுப்பினர்களை அதிகம் அதிகமாக துரூது ஷரீஃப் துஆவையும், கீழ்க்கண்ட துஆக்களையும் ஓதி வரும்படி வலியுறுத்திக் கூறியுள்ளார்கள்.

(1) اَللّٰهُمَّ صَلِّ عَلٰى مُحَمَّدٍ وَّعَلٰى اٰلِ مُحَمَّدٍ كَمَا صَلَّيْتَ عَلٰى اٰلِ اِبْرَاهِيْمَ وَعَلٰى اٰلِ اِبْرَاهِيْمَ اِنَّكَ حَمِيْدٌ مَّجِيْدٌ اَللّٰهُمَّ بَارِكْ عَلٰى مُحَمَّدٍ وَّعَلٰى اٰلِ مُحَمَّدٍ كَمَا بَارَكْتَ عَلٰى اِبْرَاهِيْمَ وَعَلٰى اٰلِ اِبْرَاهِيْمَ اِنَّكَ حَمِيْدٌ مَّجِيْدٌ۔

பொருள்: இறைவா! நீ இப்ராஹீம் (அலை) அவர்களுடைய குடும்பத்தார் மீதும் கருணை காட்டியது போன்று முஹம்மது (ஸல்) அவர்கள் மீதும், அவர்களுடைய குடும்பத்தார் மீதும் கருணை காட்டுவாயாக. நிச்சயமாக நீ புகழுக்குரியவனும் மகத்துவமுள்ளவனும் ஆவாய்.

இறைவா! நீ இப்ராஹீம் (அலை) அவர்கள் மீதும் அவர்களுக்கும் அவர்களுடைய குடும்பத்தாருக்கும் அளவற்ற அருட்களைக் கொடுத்தது போன்று முஹம்மது (ஸல்) அவர்களுக்கும், அவர்களுடைய குடும்பத்திற்கும் அருள் புரிவாயாக. நிச்சயமாக நீ புகழுக்குரியவனும் மகத்துவமுள்ளவனும் ஆவாய்.

(2) رَبَّنَا لَا تُزِغْ قُلُوْبَنَا بَعْدَ اِذْ هَدَيْتَنَا وَهَبْ لَنَا مِنْ لَّدُنْكَ رَحْمَةً ۚ اِنَّكَ اَنْتَ الْوَهَّابُ

பொருள்: எங்களை இறைவா! நீ எங்களுக்கு நேர்வழி காட்டியதன் பின்னர் எங்கள் உள்ளங்களைக் கோணலாக்காதிருப்பாயாக. எங்களுக்கு உன்னிடமிருந்து அருளை வழங்குவாயாக. நிச்சயமாக நீயே வாரி வழங்குபவனாவாய். (3:9)

رَبَّنَا اغْفِرْ لَنَا ذُنُوْبَنَا وَاِسْرَافَنَا فِيْٓ اَمْرِنَا وَثَبِّتْ اَقْدَامَنَا وَانْصُرْنَا عَلَى الْقَوْمِ الْكٰفِرِيْنَ

பொருள்: எங்கள் இறைவா! எங்கள் குற்றங்களையும், எங்கள் செயல்களில் எங்களின் வரம்பு மீறுதல்களையும் எங்களுக்கு மன்னித்தருள்வாயாக! எங்கள் காலடிகளை உறுதிப்படுத்துவாயாக. மேலும் நிராகரிக்கும் மக்களுக்கு எதிராக எங்களுக்கு உதவி செய்வாயாக. (3:148)

(4) رَبَّنَا ظَلَمْنَآ اَنْفُسَنَا وَاِنْ لَّمْ تَغْفِرْ لَنَا وَتَرْحَمْنَا لَنَكُوْنَنَّ مِنَ الْخٰسِرِيْنَ

பொருள்: எங்கள் இறைவா! நாங்கள் எங்களுக்கே அநீதி இழைத்துக் கொண்டோம். நீ எங்களை மன்னித்து எங்களுக்குக் கருணை காட்டாவிடில் நாங்கள் நஷ்டமடைந்தவர்களைச் சார்ந்தவர்களாகி விடுவோம். (7:24)

(5) رَبَّنَآ اٰتِنَا فِي الدُّنْيَا حَسَنَةً وَّفِي الْاٰخِرَةِ حَسَنَةً وَّقِنَا عَذَابَ النَّارِ

பொருள்: எங்கள் இறைவா! எங்களுக்கு இந்த உலகிலும் வெற்றியினை வழங்குவாயாக. மறுமையிலும் வெற்றியினை (வழங்குவாயாக.) எங்களை நெருப்பின் தண்டனையிலிருந்தும் காப்பாற்றுவாயாக. (2:202)

(6) اَللّٰهُمَّ اِنَّا نَجْعَلُكَ فِيْ نُحُوْرِهِمْ وَنَعُوْذُبِكَ مِنْ شُرُوْرِهِمْ

பொருள்: என் இறைவா! நாங்கள் உன்னை அவர்களின் உள்ளத்தில் வைக்கின்றோம். அதாவது உன் மீதான அச்சத்தை அவர்களது உள்ளத்தில் நிறைப்பாயாக. மேலும் அவர்களது விஷமங்களிலிருந்து உன்னிடம் பாதுகாப்பு தேடுகின்றோம்.

(அபூதாவூது, கிதாப் ஃபஸாயிலுல் குர்ஆன்)

(7) رَبِّ كُلُّ شَيْءٍ خَادِمُكَ رَبِّ فَاحْفَظْنِيْ وَانْصُرْنِيْ وَارْحَمْنِيْ

பொருள்: எங்கள் இறைவா! அனைத்தும் உனக்குத் தொண்டு செய்பவைகளாகும். என் இறைவா! என்னைப் பாதுகாப்பாயாக. மேலும் எனக்கு உதவி செய்வாயாக. மேலும் என் மீது கருணை காட்டுவாயாக.

(ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்கு அருளப்பட்ட இல்ஹாமிய துஆ)

## தேசிய இஜ்திமா 2018 ஆம் ஆண்டிற்கான ஒப்புதல்

**சய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் மிகுந்த பரிவுடன் கிளை அமைப்புகளின் தேசிய இஜ்திமாக்களை 12,13,14 அக்டோபர் 2018 (வெள்ளி, சனி மற்றும் ஞாயிறு) ஆகிய தேதிகளில் நடத்துவதற்கான அனுமதியை வழங்கியுள்ளார்கள்.**

**கிளை அமைப்புகளைச் சார்ந்த உறுப்பினர்கள் இப்போதிருந்தே துஆக்களுடன் காதியான் தாருல் அமானின் ஆன்மீகச் சூழலில் நடைபெறவிருக்கின்ற இந்த அருளுக்குரிய தேசிய இஜ்திமாவில் கலந்து கொள்வதற்கு ஆயத்தம் ஆகுங்கள். இந்த இஜ்திமாக்கள் எல்லா வகையிலும் வெற்றி பெறுவதற்கும், அருளுக்குரியதாக இருப்பதற்கும் துஆக்கள் செய்து வாருங்கள். ஜஸாகுமுல்லாஹ் அஹ்ஸனல் ஜஸா. (பத்ர் வாரப் பதிப்பு)**

# சய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்களது ஜெர்மனி சுற்றுப் பயணம் 2017

23 ஏப்ரல் 2017 ல் ஜெர்மனியின் செயற்குழு கூட்டத்தில் ஹுஸூர் அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் கலந்து கொண்டு, பல்வேறு செயலர்கள் செய்கின்ற பணிகளைப் பற்றி கேட்டு அவர்களுக்கு வழங்கிய வழிகாட்டல்கள்

(அறிக்கை: அப்துல் மாஜித் தாஹிர், கூடுதல் வகீலுத் தஃப்ஸீர், இலண்டன்)

*(38 வது இதழின் தொடர்ச்சி...)*

**கூடுதல் வெளியுறவு செயலர்:**

விசா போன்ற விவகாரங்கள் என்னிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கின்றன என்று அவர் கூறியதற்கு ஹுஸூர் அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள், உலகின் ஏனைய பகுதிகளிலிருந்து அஹ்மதிகள் இந்தியா செல்வதற்கு விசா கிடைத்து விடுகின்றது. ஆனால் ஜெர்மனியில் உள்ளவர்களுக்கு கிடைப்பதில் ஏன் சிரமங்கள் ஏற்படுகின்றன? என்று கேட்டார்கள்.

அதற்கு கூடுதல் வெளியுறவுச் செயலர் அவர்கள், எவர்கள் தில்லி, அமிர்தசரஸ் போன்ற இடங்களுக்குச் செல்வதற்காக முதலில் விசாவிற்காக பதிவு செய்கின்றார்களோ அவர்களுக்கு விசா கிடைத்து விடுகின்றது. ஆனால் எவர்கள் வாகா எல்லை வழியாக செல்ல வேண்டும் என்று நினைக்கின்றார்களோ அவர்களுக்கு விசா கொடுக்காமல் இருக்கின்றார்கள் என்று தெரிவித்தார்.

**ஹுஸூர் அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் கூறினார்கள்:**

நீங்கள் ஜமாஅத்துகளுக்கு சுற்றறிக்கை அனுப்ப வேண்டும். அதாவது வருங்காலத்தில் மக்கள் காதியான் செல்வதாக இருந்தால் அமிர்தசரஸ், தில்லி வழியாக அவர்கள் பயணத்தைத் திட்டமிட வேண்டும். அவ்வாறில்லையென்றால் விசா கிடைப்பதில் சிரமங்கள் இருக்கின்றன என்பதை அவர்களுக்குத் தெரிவிக்க வேண்டும். ஏனென்றால் மக்கள் இது தொடர்பாக புகார் அளிக்கும்போது வேறொரு வடிவத்தில் புகார் அளிக்கப்படுகிறது. எனவே நீங்களே இது பற்றி மக்களிடம் கூறுங்கள்.

**பிறகு ஹுஸூர் அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் கூறினார்கள்:**

தூதரக அலுவலகங்களுடன் உங்களுக்குத் தொடர்புகள் இருந்து வர வேண்டும். ஒரு மாநாட்டில் கலந்து கொள்வதற்காகச் செல்வதற்கு என்னென்ற நிபந்தனைகளை விதிக்கின்றார்கள் என்பதை அவர்களிடமே கேட்டு மக்களுக்கு முதலிலேயே நாம் வழிகாட்டல்களை வாங்க வேண்டும். இவ்வாறு தஃமீலோ தன்ஃபீஸ் துறை மூலமாக அது காதியானிலிருந்தும் இது தொடர்பான விபரங்களை நீங்கள் பெற்றுக் கொள்ளலாம்.

அதாவது அவர்கள் என்னென்ற விஷயங்களைப் பரிந்துரைக்கின்றார்களோ அதற்கேற்ப நீங்கள் விசா பெறுவதற்கு முயற்சி செய்ய வேண்டும். ஏனென்றால் அவர்களும் நாட்டின் உள்துறை அமைச்சகத்திலிருந்தே இந்த விஷயங்களைப் பெறுகின்றார்கள். ஆனால் இந்த எல்லாப் பணிகளையும் இப்போதே நீங்கள் செய்ய ஆரம்பித்து விட வேண்டும். மக்கள் விசாவிற்காக பதிவு செய்வதாக இருந்தால் அது தொடர்பாக ஜமாஅத்துகளுக்கு சுற்றறிக்கைகளை அனுப்ப வேண்டும்.

அதாவது இந்த இந்த நிபந்தனைகளைப் பேணியவாறு நீங்கள் விண்ணப்பத்தை அனுப்புங்கள் என்று கூற வேண்டும். பிறகு அந்த சுற்றறிக்கை ஒவ்வொரு நபரையும் சென்றடைந்து விட்டதா என்பதை உறுதி செய்ய வேண்டும். பிறகு வெளியுறவுச் செயலரிடம் நீங்கள் எல்லாருக்கும் இந்த சுற்றறிக்கையை அனுப்பி விட்டீர்களா? என்று நாம் கேட்டுத் தெரிந்து கொள்ள வேண்டும். பல்வேறு ஊடகங்கள் மற்றும் வழிமுறைகள் மூலமாக நாம் இது பற்றிய தகவல்களை ஒன்று திரட்ட வேண்டும். எங்கெல்லாம் முரப்பிகள் இருக்கின்றார்களோ அந்த முரப்பிகளிடம் உங்களது ஜமாஅத்துகளில் இந்த சுற்றறிக்கை வந்து சேர்ந்ததா? என்பதை நீங்கள் கேட்டுத் தெரிந்து கொள்ள வேண்டும்.

இவ்வாறு நீங்கள் செய்தால் பிறகு உங்கள் மீது எந்தவொரு குற்றச்சாட்டும் வராது. எந்தக் குற்றச்சாட்டு எழுந்தாலும் அது குற்றம் சாட்டுபவரின் தலையிலேயே விழும். எனவே இதில் குற்றமற்றவர்களாக நடந்து கொள்வதற்கு எச்சரிக்கையாக செயல்பட வேண்டும் என்று ஹுஸூர் அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் தெரிவித்தார்கள்.

**வக்ஃபே நவ் செயலர்:**

**ஹுஸூர் அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் கூறினார்கள்:**

சில படித்த பெண்களுக்கு 24 அல்லது 26 வயது ஆகிவிட்ட பிறகு அவர்கள், எங்களிடம் அதிகமாக அறிவு இருக்கிறது. எனவே வக்ஃபே நவ் பாடத்திட்டம் படிக்க வேண்டிய அவசியம் எங்களுக்கு இல்லை என அவர்கள் கூறுவதாக எனக்குத் தெரிய வந்தது. 24 வயது வரையிலான பாடத்திட்டம் தயார் செய்யப்பட்டுள்ளது. அதை ஒவ்வொருவருக்கும் கற்றுக் கொடுக்க வேண்டும். எவர்கள் அந்தப் பாடத்திட்டத்தை படித்து முடித்து விட்டார்களோ அவர்களுக்கு வேறு நூல்களை வழங்க வேண்டும். அந்த நூல்களைப் படிக்குமாறு அவர்களுக்கு அறிவுறுத்த வேண்டும். அதாவது இந்த இந்த நூல்களை படியுங்கள் என்று நீங்களே அவர்களுக்குக் கூற வேண்டும். உலக அறிவை மட்டும் பெறுவதன் பக்கம் அதிக முயற்சி இருக்கக் கூடாது. மார்க்க அறிவையும் அவர்கள் கற்றுக் கொள்வதற்கு முழுமையான முயற்சி செய்யப்பட வேண்டும்.

**உமூரே ஆமா செயலர்:**

ஹுஸூர் அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் கூறினார்கள்:

கஸா துறையுடைய தீர்ப்புகளைச் செயல்படுத்துவது, ஜமாஅத்திலிருந்து நீக்கப்பட்டவர்களிடமிருந்து மன்னிப்புக்கான கடிதங்களைப் பெறுவது, அது தொடர்பான சுற்றறிக்கையை அனுப்புவது மட்டும் உமூரே ஆமா செயலரின் பணியல்ல. உமூரே ஆமாவிற்கு இன்னும் பல பணிகள் இருக்கின்றன. எவ்வாறு ஏனைய துறைகள் தங்கள் பணிக்கென்று பல திட்டங்களை உருவாக்குகின்றனவோ அவ்வாறு நீங்களும் சில திட்டங்களை உருவாக்க வேண்டும்.

எவ்வாறு வியாபாரத் துறையைச் சேர்ந்தவர்கள் தங்களுடைய பட்டியலைத் தயார் செய்கின்றார்களோ அவ்வாறு பட்டியலை நீங்களும் தயார் செய்ய வேண்டும். அதாவது எத்தனை பேர் வேலையில்லாமல் இருக்கின்றார்கள் என்பது பற்றி உங்களுக்குத் தெரிந்திருக்க வேண்டும். வேலை இல்லாமல் இருப்பதன் காரணமாக பல பிரச்சனைகள் உருவாகி விடுகின்றன. பிரச்சனைகள் அதிகரிப்பதற்கு இது காரணமாக அமைகிறது.

எனவே குத்தாமுல் அஹ்மதிய்யாவிற்கும் இதுபற்றிக் கவனமூட்டுங்கள். அன்சாருல்லாஹ்வுக்கும் இதுபற்றி கவனமூட்டுங்கள். அதாவது எவர்கள் வேலையின்றி

இருக்கின்றார்களோ அவர்களுக்கு வேலை கொடுப்பதன் பக்கம் கவனம் செலுத்தப்பட வேண்டும். இவ்வாறு எல்லா துறைகளுடைய ஆய்வுகளையும் மேற்கொண்ட பிறகு ஹுஸூர் அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் இறுதியாக ஜமாஅத்துடைய செயற்குழு உறுப்பினர்களுக்கும் ஜமாஅத் தலைவர்களுக்கும் சில பொதுவான வழிகாட்டல்களை வழங்கினார்கள்.

**பொதுவான வழிகாட்டல்கள்:**

**ஹுஸூர் அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் தமது உரையில் இவ்வாறு கூறினார்கள்:**

நான் ஜமாஅத்திலுள்ள தலைவர்களுக்கும், ஜமாஅத்திலுள்ள செயற்குழு உறுப்பினர்களுக்கும் இந்த விஷயத்தைக் கூற விரும்புகின்றேன். அதாவது நீங்கள் சுயமே உங்களை மார்க்கத்தின் தொண்டராகக் கருதுங்கள். மார்க்கத் தொண்டராக கருதியவாறு நீங்கள் பணியாற்றுங்கள். ஒருபோதும் பொறுப்பில் உள்ளவர்களாக உங்களைக் கருதாதீர்கள்.

மாறாக, மார்க்க சேவை செய்பவர்களாக உங்களைக் கருதிக் கொள்ளுங்கள். அதிகாரி அல்லது பிறர் மீது ஆதிக்கம் செலுத்துகின்றவர் என்ற நிலை ஒருபோதும் உங்களிடம் இருக்கக்கூடாது. இதன் காரணமாகத்தான் ஜமாஅத் சகோதரர்களிடத்தில் புகார்கள் உருவாகின்றன. ஒவ்வொருவரும் நாங்கள் தொண்டு செய்பவர்களாக இருக்கின்றோம் என்ற உணர்வை கொண்டவர்களாக இருக்க வேண்டும்.

இந்த உணர்வு உங்களிடம் ஏற்பட வேண்டும். ஒவ்வொருவரையும் நீங்கள் நேரடியாகச் சென்றடைய முயற்சி செய்ய வேண்டும். அவர்களின் பிரச்சனையை நீங்கள் தீர்த்து வைக்க வேண்டும். கீழ்மட்டத்திலிருந்து இந்த அமைப்பு செயல்படக்கூடியதாக இருக்க வேண்டும். அதாவது ஒவ்வொரு ஜமாஅத் உறுப்பினருடன் தொடர்பு இருக்க வேண்டும். பிறகு மண்டல அளவிலும் இதைச் செய்ய வேண்டும். பிறகு தேசிய அளவிலும் இதைச் செய்ய வேண்டும்.

பிறகு தலைமையகத்தோடும் காலத்தின் கலீஃபாவோடும் இந்த தொடர்பு விரிவானதாக இருக்க வேண்டும். அமைப்பு ரீதியான விவகாரங்கள், தர்பிய்யத் விவகாரங்கள் அல்லது வேறு பல ஜமாஅத் நிகழ்ச்சிகள் உள்ளன. இதற்காக மக்கள் வரை சென்றடைய வேண்டிய தேவை உங்களுக்கு இருக்கின்றது. மக்கள் உங்களிடம் வருவார்கள் என்று நீங்கள் ஒருபோதும் காத்திருக்க வேண்டாம். ஜமாஅத்திலுள்ள பொருளாளர் எல்லா இடங்களிலும் மிகவும் செயல் துடிப்புடன் செயலாற்றுபவராகப் பார்த்துக் கொள்ள வேண்டியது உங்களின் கடமையாகும். எல்லா ஜமாஅத்துகளிலும் செகரட்டரி மால் மிகவும் செயல் துடிப்புள்ள நபராக இருக்க வேண்டும்.

**ஹுஸூர் அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் கூறினார்கள்:**

குறிப்பாக முரப்பிகளுக்கு நீங்கள் கண்ணியம் வழங்க வேண்டும். இது தொடர்பாக பல புகார்கள் வருகின்றன. முபல்லிக் அல்லது முரப்பிகளைச் சந்திக்கும் போது கண்ணியத்துடனும் அன்புடனும் அவர்களைச் சந்திக்க வேண்டும். ஒரு முரப்பி ஜெர்மனியில் படித்திருக்கின்ற ஓர் இளைஞராக இருக்கலாம். வயதில் சிறியவராக இருக்கலாம். எந்நிலையிலும் அவர் முரப்பியே ஆவார்.

எனவே அவருக்கு கண்ணியம் அளிப்பது, அவரது தேவைகளைக் கருத்தில் கொள்வது, அவர் உங்களுடைய ஜமாஅத்தில் நியமிக்கப்பட்டுள்ள முபல்லிக்காக இருந்தால் அவரது தேவைகளை நிறைவு செய்வது ஆகியவை உங்களுடைய பணியே ஆகும். சில விஷயங்கள் இருக்கின்றன. அதை உங்களால் செய்ய முடியவில்லை என்றால் அதுபற்றி அமீர் ஜமாஅத்திற்கு எழுத்துப்பூர்வமாக நீங்கள் தெரிவியுங்கள். அல்லது அமீர் ஜமாஅத்தின் மூலமாக அத்தகைய விஷயங்களை தலைமையத்திற்கு அனுப்பி வையுங்கள். எவ்வாறு விஷயங்களை பிறருக்கு புரிய வைப்பது என்பதைத் தலைமையகம் பார்த்துக் கொள்ளும். நம்மால் இயன்ற வகையில் விஷயங்களை ஒவ்வொருவருக்கும் புரிய வைப்பதற்கு நாம் முயற்சி செய்வோம். எனவே எந்தவொரு பொறுப்பாளர் ஆனாலும் சரி; ஜமாஅத்தின் தனிநபர் ஆனாலும் சரி. ஒரு முரப்பியுடைய கண்ணியத்திற்கும் அவருடைய அந்தஸ்திற்கும் எதிராக எதையும் பேசக் கூடாது. எனவே முன்னெச்சரிக்கையாக நடந்து கொள்ள வேண்டியது மிக மிக கட்டாயமாகும்.

**பிறகு ஹுஸூர் அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் கூறினார்கள்:**

இவ்வாறு தேசிய அளவில் பல்வேறு துறைகள் திட்டம் தீட்டி செயல்படுகின்றன. அதற்கான ஒப்புதலை நீங்கள் தேசிய செயற்குழுவிலிருந்து பெற வேண்டும். செயற்குழுவில் ஒரு விஷயம் விவாதிக்கப்பட்ட பிறகு அதை செயல்படுத்த செயற்குழு தீர்மானித்த பிறகே அதை ஜமாஅத்துகளில் நீங்கள் அந்த திட்டத்தை செயல்படுத்த வேண்டும். சில நேரங்களில் புதிய ஆலோசனைகளும் கூட உங்களுக்குத் தெரிவிக்கப்படும்.

பிறகு அந்த திட்டங்களை முறையாக நிறைவேற்றுவதற்காக என்ன செய்ய வேண்டுமோ அதனை தொடர்ந்து செய்ய வேண்டும். தனிப்பட்ட முறையில் நீங்கள் பணி செய்கின்ற அந்த வழிமுறையை முடிவிற்குக் கொண்டு வாருங்கள். உள்ளூர் ஜமாஅத்துகளில் அங்குள்ள ஜமாஅத் சகோதரர்களுக்கும் உள்ளூர் பொறுப்பாளர்களுக்கும் இருக்க வேண்டும்.

அதாவது தேசிய செயற்குழு நமக்குத் தொண்டு செய்வதற்காகத்தான் அமைக்கப்பட்டுள்ளது. அதிகாரத்தைக் காட்டுவதற்கோ அல்லது நாம் மேல்நிலையில் இருக்கின்றோம் என்பதைக் காட்டுவதற்காகவோ தேசிய செயற்குழு அமைக்கப்படவில்லை. எனவே இதனை ஒவ்வொரு பொறுப்பாளரும் உணர்ந்து கொள்ள வேண்டும். நான் இதற்கு முன்னரும் மிகத் தெளிவாகக் கூறியிருக்கின்றேன்.

பிறகு மீண்டும் இதனைக் கூறுகின்றேன். ஜமாஅத்தின் செயற்குழு உறுப்பினர்கள், தலைவர்கள், ஜமாஅத் தலைவர்களுக்குக் கீழ் இயங்கி வருகின்ற உறுப்பினர்கள் இதனை உணர்ந்து கொள்ள வேண்டும். அதாவது நீங்கள் யாருக்கும் தலைவர்களாக நியமிக்கப்படவில்லை. யாருக்கும் ஆட்சியாளராகவும் நியமிக்கப்படவும் இல்லை. மாறாக, நீங்கள் தொண்டர்களாக இருக்கின்றீர்கள். இந்த உணர்வுடன் பணி செய்ய வேண்டும். அவ்வாறு உங்களுடைய பணி செய்ய முடியாமல் போனால் நீங்கள் மன்னிப்பு கேட்டு அதிலிருந்து விலகிக் கொள்ளுங்கள். உங்களிடத்தில் பணிவை உருவாக்கிக் கொள்ளுங்கள்.

அல்லாஹ் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களிடம் இவ்வாறு கூறியுள்ளான்:

உமது பணிவான வழிமுறைகள் எனக்கு மிகவும் பிடித்தமானவையாக இருக்கின்றன.

எனவே பணிவை மேற்கொள்வதுதான் அசல் விஷயமாக இருக்கின்றது. பணிவு தான் உங்களுடைய அசல் அந்தஸ்தையும் தகுதியையும் வழங்கும். உங்களுடைய கண்ணியத்தையும் பணிவு தான் நிலைத்திருக்கச் செய்யும்.

உங்களுக்கு உண்மையான கண்ணியம் எப்போது கிடைக்கும் என்றால் உங்களிடம் எந்த அளவு பணிவு அதிகமாக இருக்குமோ அந்த அளவு உண்மையான கண்ணியம் கிடைக்கும். ஆணவத்தாலோ அல்லது கர்வத்துடன் செயல்படுவதாலோ ஒருபோதும் கண்ணியம் கிடைக்க முடியாது.

(தொடரும் - இன்ஷா அல்லாஹ்...)

## காதியானிலுள்ள நஷ்ரோ இஷாஅத் (வெளியீட்டுத் துறை) -யில் உள்ள DTP மையத்தில் பணியாற்ற விருப்பமுள்ள பெண் பணியாளர்கள் தேவை

சத்ர் அஞ்சுமன் அஹ்மதிய்யாவின் நஸாரத் நஷ்ரோ இஷாஅத்தில் உள்ள DTP -யில் ஒரு கம்பியூட்டர் ஆப்பரேட்டரின் தேவை இருக்கின்றது. இதில் பணியாற்ற விரும்பும் பெண்கள் நஸாரத் தீவானிலிருந்து இதற்கான படிவத்தைப் பெற்று அதை நிரப்ப வேண்டும். பிறகு Attested செய்யப்பட்ட தங்களது அனைத்து கல்விச் சான்றிதழ்களின் நகல்களையும், பூர்த்தி செய்யப்பட்ட படிவத்தையும் ஜமாஅத்தின் அமீர், ஜமாஅத் தலைவர், லஜ்னா தலைவி ஆகியோரது உறுதிப்படுத்தும் கையெழுத்துடன் நஸாரத் தீவானிற்கு இரண்டு மாதங்களுக்குள் அனுப்பி வைக்க வேண்டும்.

1. பணியாற்ற விரும்புபவர் குறைந்தபட்சம் 12 –ஆம் வகுப்பு படித்திருக்க வேண்டும். அதில் Second Division –ல் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.

2. ஹிந்தி, உருது ஆகிய மொழிகளை எழுதுவதற்கும் படிப்பதற்கும் தெரிந்திருக்க வேண்டும்.

3. ஹிந்தி, உருது டைப்பிங் செய்வதில் திறமை பெற்றவராக இருக்க வேண்டும். குறைந்தபட்சம் அதில் ஒரு வருட கால அனுபவம் இருக்க வேண்டும். Keyboard –ஐப் பார்க்காமலேயே கம்போஸ் செய்யத் தெரிந்திருக்க வேண்டும். ஒரு மணி நேரத்தில் குறைந்தபட்சம் 300 சொற்களை அவரால் டைப் செய்ய முடிய வேண்டும்.

4. ஹிந்தி டைப்பிங்கை In-Design Software –ல் Chanaky - Unicode ஃபாண்டில் செய்யத் தெரிந்திருக்க வேண்டும்.

5. Computer Science -ல் டிப்ளமா படித்திருக்க வேண்டும்.

6. In-Design, MS Word, Inpage பற்றிய அடிப்படையான விஷயங்களைத் தெரிந்திருக்க வேண்டும்.

7. வக்ஃபே ஸிந்தகீ அல்லது வக்ஃபே நவ் திட்டத்தில் பங்கு பெற்றுள்ள உறுப்பினர்கள் தங்களது வக்ஃபே நவ் தொடர்பான எண்ணை விண்ணப்பத்தில் குறிப்பிட வேண்டும்.

8. விண்ணப்பத்தில் தனது தந்தை / கணவர் / காப்பாளர் ஆகியோரது உறுதிப்படுத்தும் கையெழுத்தும் இடம்பெற்றிருக்க வேண்டும்.

9. பணி செய்ய விரும்புபவர் நடைபெறும் நேர்காணல் எந்த தேதியில் நடைபெறும் என்பது பற்றி பின்னர் தகவல் தெரிவிக்கப்படும். நேர்க்காணலிற்காக காதியான் வருவதற்கும் திரும்பிச் செல்வதற்குமுள்ள செலவுகளை பணி செய்ய விரும்பபுவர் தாமே ஏற்றுக் கொள்ள வேண்டும்.

10. காதியானில் தங்குவதற்கான ஏற்பாட்டை தாமே செய்து கொள்ள வேண்டும்.

(நாஸிர் தீவான் சத்ர் அஞ்சுமன் அஹ்மதிய்யா – காதியான்)

## நூருல் இஸ்லாம் துறையின் நேரங்கள்

தினந்தோறும் காலை 9.00 மணியிலிருந்து 11.00 மணி வரை (வெள்ளிக்கிழமை விடுமுறை நாள்)

**தொலைபேசி எண்:**

***1800 425 40000***

இந்த **TOLL FREE** எண்ணில் ஃபோன் செய்து அஹ்மதிய்யா ஜமாஅத் தொடர்பான தகவல்களை அறிந்து கொள்ளலாம்.

## ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் ஸ்தாபகர் ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி (அலை) அவர்கள் கொண்டிருந்த அன்பு

“கிறிஸ்தவ பிரச்சாரகர்கள் நமது ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுக்கு எதிராக எண்ணற்ற பழித்துரைகளை இட்டுக்கட்டிக் கூறியுள்ளனர். தமது இந்த ஏமாற்று வேலை மூலமாக அதிகமான மக்களை வழிகெடுத்து விட்டனர். இந்த மக்கள் தூய ரஸூல் (ஸல்) அவர்களது மகிமைக்கு எதிராக செய்கின்ற பரிகாசமும் எள்ளி நகையாடுதலும் எந்த அளவு எனது உள்ளத்தில் துக்கத்தை ஏற்படுத்தியதோ அதுபோன்று வேறெந்த பொருளும் ஒருபோதும் எனக்கு துக்கத்தை ஏற்படுத்தியதில்லை.

படைப்பினங்களில் சிறந்தவரான ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது தூய நற்பண்புகளுக்கு எதிராக அவர்கள் பேசுகின்ற உள்ளத்தைப் புண்படுத்தக்கூடிய இழிசொற்களும் பழித்துரைகளும் எனது உள்ளத்தைக் கடுமையாகக் காயப்படுத்தி இருக்கின்றது.

இறைவன் மீது ஆணையாக! எனது சந்ததிகளையும் எனது சந்ததிகளின் சந்ததிகளையும் எனது எல்லா நண்பர்களையும் என்னுடன் ஒத்துழைக்கின்ற எனக்கு உதவி செய்கின்ற அனைவரையும் எனது கண்களுக்கு முன்னால் கொலை செய்தாலும் எனது கைகளையும் கால்களையும் வெட்டிப் போட்டாலும் எனது கண்களின் மணியைத் தோண்டி எடுத்து வெளியில் எறிந்தாலும் எனது எல்லா ஆசைகளும் நிறைவேறாமல் அவற்றிலிருந்து நான் விலக்கி வைக்கப்பட்டாலும், எனது எல்லா மகிழ்ச்சியையும் செழிப்பான நிலையையும் நான் இழந்து விட்டாலும் மிகவும் கண்ணியத்திற்குரிய ரஸூல் (ஸல்) அவர்கள் மீது இத்தகைய அசுத்தமான தாக்குதல்கள் நடத்தப்படும்போது எனக்கு ஏற்படும் இந்த துக்கம் இந்த எல்லா விஷயங்களுக்கும் எதிரில் எனக்கு மிகவும் பாரமானதாக இருக்கின்றது.

எனவே, எனது விண்ணின் எஜமானனே! (இறைவனே!) நீ எங்கள் மீது உனது கருணை மற்றும் உதவியின் பார்வையை செலுத்துவாயாக! மேலும் எங்களுக்கு இந்த மகத்தான சோதனையிலிருந்து இரட்சிப்பை வழங்குவாயாக!.”

(ஆயினாயே கமாலாத்தே இஸ்லாம் என்ற நூலிலிருந்து அரபி வாக்கியங்களின் மொழியாக்கம்)

## காதியானில் 124 –வது ஆண்டு மாநாடு

**ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் காதியானில் நடைபெறும் 124 –வது ஆண்டு மாநாடு 2018 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 28, 29, 30 (வெள்ளி, சனி, ஞாயிறு) ஆகிய தேதிகளில் நடத்துவதற்கான அனுமதியை வழங்கியுள்ளார்கள்.**

**ஜமாஅத் சகோதரர்கள் இப்போதிருந்தே துஆக்களுடன் இந்த அருளுக்குரிய ஆண்டு மாநாட்டில் கலந்து கொள்வதற்கு ஆயத்தம் ஆகுங்கள். அல்லாஹ் நம் அனைவருக்கும் இந்த ஆன்மீக மாநாட்டில் கலந்து கொண்டு அதன் அருள்களிலிருந்து பலன் பெறுவதற்கான நல்வாய்ப்பை வழங்குவானாக!**

**இந்த ஆண்டு மாநாடு எல்லா வகையிலும் வெற்றி பெறுவதற்கும், அருளுக்குரியதாக இருப்பதற்கும், நல்ல ஆன்மாக்கள் நேர்வழி பெறுவதற்கு காரணமாக அமைவதற்கும் துஆக்கள் செய்து வாருங்கள். ஜஸாகுமுல்லாஹ் அஹ்ஸனல் ஜஸா.**

**(நாஸிர் இஸ்லாஹோ இர்ஷாது மர்கஸிய்யா, காதியான்)**

EDITOR
O.M. MUZZAMMIL AHMAD
Mobile : + 91 98885-67232
SUB EDITOR
A. KHALEEL AHMAD
E-mail : editorbadrtamil@gmail.com
Website : www.akhbarbadrqadian.in
www.alislam.org/badr

REGISTERED WITH THE REGISTRAR OF THE NEWSPAPERS FOR INDIA AT NO PUNTAM/2016/68785

The Weekly **BADAR** Qadian

பதர் வாரப் பத்திரிகை காதியான்

Distt. Gurdaspur (Pb.) INDIA Qadian - 143516

Postal Reg.No. GDP-39/2017-2019 Vol. 3 Thursday 04 October 2018 Issue No. 40

MANAGER
NAWAB AHMAD
Tel. : +91 1872-224757
Mobile : +91 94170- 20616
E-mail : managerbadrqnd@gmail.com

**ANNUAL SUBSCRIPTION** : Rs.500/- (Per Issue Rs. 9/-) (**WEIGHT** - 20-50 gms/issue)

*(முதல் பக்கத்தின் தொடர்ச்சி...)*

பராஹீனே அஹ்மதிய்யாவில் திரும்பத் திரும்ப விவரத்துடன் எழுதப்பட்ட அதே வாதம்தான் என்பதை நான் அறிந்து கொண்டேன். இந்த இடத்தில் இன்னும் ஒரு வெளிப்பாட்டையும் குறிப்பிடுகிறேன். இதனை நான் ஏதாவது எனது நூலில் அல்லது பிரசுரத்தில் பிரசுரித்திருக்கிறேனா? இல்லையா? என்பது எனக்கு நினைவில் இல்லை.

ஆனால் இதனை நூற்றுக்கணக்கான மக்களுக்கு நான் கூறியுள்ளேன் என்று எனக்கு நினைவில் உள்ளது. மேலும் எனது வெளிப்பாடுகளின் நினைவுக் குறிப்பில் இது இடம்பெற்றிருக்கிறது. இறைவன் எனக்கு முதலாவதாக மர்யம் என்று பட்டம் அளித்தான். பிறகு என்னுள் ஆவி ஊதியதாக இறைவெளிப்பாட்டை இறக்கினான். இதன் பின் இந்த இறைவெளிப்பாடு இறங்கியது.

فَاَجَآءَهَا الْمَخَاضُ اِلٰى جِذْعِ النَّخْلَةِ قَالَتْ يٰلَيْتَنِىْ مِتُّ قَبْلَ هٰذَا وَكُنْتُ نَسْيًا مَّنْسِيًّا

அதாவது பின்னர் மர்யமை (மர்யம் என்பது இந்த எளியவனையே குறிக்கும்) பிரசவ வேதனையானது பேரீச்ச மரத்தின் பக்கம் கொண்டு வந்தது. அதாவது, பொதுமக்கள், அறிவிலிகள், புரியாத ஆலிம்கள் போன்றோரைச் சந்திக்க நேர்ந்தது. அவர்களிடம் ஈமான் (நம்பிக்கை) என்னும் கனி காணப்படவில்லை. அவர்கள் என்னை நிராகரித்தனர். இழிவுபடுத்தினர். பழித்துரைத்தனர்.

மேலும் பெரும் புயலையே உருவாக்கினர். அப்போது மர்யம் அந்தோ! நான் இதற்கு முன்பே இறந்து போயிருக்கக் கூடாதா? எனது பெயரும் அடையாளமும் எஞ்சி இருக்காமல் போயிருக்கக் கூடாதா? என்று கூறினார்.

இது ஆரம்பத்தில் ஆலிம்களிடமிருந்து ஒட்டுமொத்தமாக ஏற்பட்ட பயங்கரமான கூக்குரலை சுட்டிக் காட்டுகிறது. இந்த வாதத்தை அவர்களால் சகிக்க முடியவில்லை. மேலும் அவர்கள் ஒவ்வொரு திட்டத்தைக் கொண்டும் என்னை அழிக்க விரும்பினர்.

அப்போது வேதனை, துக்கம், அறிவீனர்களின் கூக்குரல் இவற்றைக் கண்டு என் உள்ளத்தில் எழும்பிய வேதனையையும் கஷ்டத்தையும் இறைவன் இங்கு சித்திரித்துக் கூறியுள்ளான். மேலும் அதனைப் பற்றிய இறை வெளிப்பாடுகள் இன்னும் இருக்கின்றன. உதாரணமாக,

لَقَدْ جِئْتِ شَيْئًا فَرِيًّا- مَا كَانَ اَبُوْكِ امْرَاَ سَوْءٍ وَّمَا كَانَتْ اُمُّكِ بَغِيًّا

மேலும் இதோடு சேர்ந்த இன்னொரு வெளிப்பாடும் பராஹீனே அஹ்மதிய்யாவில் 521 வது பக்கத்தில் இடம் பெற்று இருக்கிறது. அதாவது,

اليس الله بكاف عبده ولنجعله اية

للناس ورحمة منا وكان امرا مقضيا- قول الحق الذى فيه تمترون

மொழியாக்கம்: மேலும் மக்கள் கூறியதாவது, நீ அருவருக்கத்தக்கதும் நிந்திக்கக் கூடியதும் நேரான பாதையை விட்டு தூரமானதுமான இந்த வேலையைச் செய்திருக்கிறாய். உனது தந்தையும்☆ தாயும் இவ்விதமானவர்களாக இருக்கவில்லையே? ஆனால் இறைவன் இந்தக் குற்றச்சாட்டுகளிலிருந்து தனது அடியானை விடுவிப்பான்.

மேலும் நாம் அவரை மக்களுக்கு ஒரு அடையாளமாக ஆக்குவோம். இது ஆரம்பத்திலேயே முடிவு செய்யப்பட்ட ஒரு விஷயமாகும். மேலும் இவ்வாறாகவே நடைபெற வேண்டியதாக இருந்தது. இவர் ஈஸப்னு மர்யமாக இருக்கிறார். இதில் மக்கள் சந்தேகம் கொள்கிறார்கள். இக்கூற்றே உண்மையானதாகும்.

(பராஹீனே அஹ்மதிய்யா பக்கம் 516 வரி 12,13 காண்க)

இவை எல்லாம் பராஹீனே அஹ்மதிய்யாவின் சொற்றொடர்களாகும். மேலும் இந்த வெளிப்பாடு உண்மையில் ஹஸ்ரத் ஈஸாவைப் பற்றியும் அவரது தாயாரைப் பற்றியும் வந்துள்ள திருக்குர்ஆனின் வசனங்களாகும். எந்த ஈஸாவைப் பற்றி முறைகேடான பிறப்பின் மூலம் பிறந்த மனிதன் என்று மக்கள் தீர்மானித்திருக்கின்றார்களோ அவரைப் பற்றியே இந்த வசனங்களில் நாம் அவரை நமது அடையாளமாக ஆக்குவோம் என அல்லாஹ் கூறுகிறான்.

இவரே எதிர்பார்க்கப்பட்ட ஈஸாவாக இருக்கிறார். இறைவெளிப்பாட்டின் வசனங்களில் மர்யம் என்றும் ஈஸா என்றும் வந்திருப்பதன் கருத்து நானாகவே இருக்கிறேன். நாம் அவரை ஓர் அடையாளமாக ஆக்குவோம் என்று என்னைப் பற்றியே கூறப்பட்டிருக்கிறது. மேலும் இவர் வர இருந்த அதே ஈஸப்னு மர்யமாக இருக்கிறார். இவர் மீது மக்கள் சந்தேகம் கொள்கிறார்கள்.

வர வேண்டியவர் இவராகவே இருக்கிறார். இதுவே உண்மையாகும் என்றும் கூறப்பட்டுள்ளது. புரியாததனாலே சந்தேகம் ஏற்பட்டுள்ளது. எவர்கள் இறைவனது இரகசியங்களைப் புரிவதில்லையோ அவர்கள் வெளித் தோற்றத்தைப் பார்க்கிறார்கள். அவர்களது பார்வை உண்மையின் பக்கம் செல்வதே இல்லை.

(கிஷ்தி நூஹ், ரூஹானீ கஸாயின் தொகுதி 19 பக்கம் 50–52)

---

அடிக்குறிப்பு: இந்த இறை வெளிப்பாட்டின் போது எனக்கு ஞாபகம் வருவதாவது, பட்டாலாவில் ஃபஸ்ல் ஷா அல்லது மஹர் ஷா என்ற பெயருள்ள ஒரு செய்யது இருந்தார். அவர் எனது தந்தையுடன் மிகவும் அன்புள்ளவராகவும் பற்றுள்ளவராகவும் இருந்தார்.

நான் வாக்களிக்கப்பட்ட மஸீஹாக வாதம் புரிவதாக எவரோ அவரிடம் கூறியதும் அவர் அழுதார். இவரின் தந்தை மிகவும் நல்ல மனிதராக இருந்தார். அதாவது இவர் யாருக்குப் பிறந்திருக்கிறார்.

இவருடைய தகப்பனார் நல்ல பண்புள்ளவராகவும், எதனையும் இட்டுக்கட்டிக் கூறும் வேலைகளிலிருந்து விலகியவராகவும், நேர்மையானவராகவும், தூய்மையான உள்ளம் கொண்டவராகவும் இருந்தார் என்று கூறினார்.

இவ்வாறு பெரும்பாலார் நீர் இவ்விதமாக ஒரு வாதத்தைப் புரிந்ததன் மூலம் உம் குடும்பத்திற்கு மிகப்பெரும் அவப்பெயரை உண்டாக்கி விட்டீர் என்று கூறினர்.

Printed & Published by: Jameel Ahmed Nasir on behalf of Nigran Board of Badar. Name of Owner: Nigran Board of Badar. And Printed at Fazle-Umar Printing Press. Harchowal Road, Qadian, Distt. Gurdaspur-143516, Punjab. And published at office of the Weekly Badar Mohallah - Ahmadiyya, Qadian, Distt. Gsp-143516, Punjab. India. Editor: Muzzammil Ahmad